# யோனாவின் இறையருள் கட்டளைப்பணி



# THE MISSION OF JONAH

- A.O. Hudson

# யோனாவின்
# இறையருள் கட்டளைப் பணி

# யோனாவின் இறையருள் கட்டளைப் பணி

- A.O. Hudson

## உள்ளடக்கம்

முன்னுரை .....................................

1. தேவனை விட்டு விரைந்தோடுதல் .................

2. கடும் புயல் ......................................

3. கடலில் நடந்த ஆச்சரியமான சம்பவம்...............................

4. எதிர்ப்பாராத சாட்சிகள்................................

5. நினிவேயின் மனந்திரும்புதல் ...............................

6. "தந்தையைப் போல"........................................................

## முன்னுரை

எபிரெய தீர்க்கதரிசிகளில் அமித்தாயின் குமாரனாகிய யோனா அநேக வகைகளில் மிக பிரபலமானவராக இருந்தார். அவர் இஸ்ரயேலர் அல்லாதவர்களுக்கு உபதேசித்ததற்காகவும், அவர் எந்தவிதமான உற்சாகமும், விருப்பமும் இல்லாமல் ஊழியத்தை செய்தபோதிலும், அவருடைய பணியில் பூரணமாக வெற்றியடைந்ததினாலும் அவர் குறிப்பிடத்தக்கவராக இருந்தார். அவருடைய வெற்றி அபாரமானதாக இருந்தபோதிலும், தேவனுடைய ஞானத்தைக் குறித்து தைரியமாக கேள்வி எழுப்பினவரும் இவர் ஒருவரே. சகல ஜனங்களையும் மீட்பதற்காக தன்னுடைய ஜீவனை கொடுக்க மனப்பூர்வமாக முன்வந்ததின் நிமித்தமும், மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்தபின் அனைவருக்கும் விடுதலை கொடுத்ததின் நிமித்தமும் மற்ற தீர்க்கதரிசிகளைப் போல, அவரும் இயேசுவை குறித்த தீர்க்கதரிசனத்தின் நிழலாக இருந்தார். பலி, மரணம், உயிர்த்தெழுதல், மற்றும் சம்பாஷணைகள் என்ற முக்கிய அம்சங்களே, இந்த வரலாற்றை சார்ந்த நாடகத்தில் காணப்படுகிறது. இயேசு பூமியின் வயிற்றில் மூன்று நாள் மூன்று பகல் இருந்ததுபோல, யோனா மீனின் வயிற்றில் மூன்று இரவு மூன்று பகல் இருந்தார். இந்த ஒரு காரியம் நம்முடைய ஆண்டவராம் இயேசுவால் சொந்த ஜனங்களுக்கே அடையாளமாகக் கொடுக்கட்டது என்று அவர் குறிப்பிட்டார். ஆனாலும் அவர்கள் அதை புரிந்துக்கொள்ளவில்லை. ஆகவே நியாயத்தீர்ப்பின் நாளில் நினிவே பட்டணத்து ஜனங்கள் எழும்பி இயேசுவை ஏற்றுகொள்ளாததின் காரணத்திற்காக குற்றம் சுமத்துவார்கள் என்றும் இயேசுவும் குறிப்பிட்டிருக்கிறார். ஏனெனில், அவர்கள் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனம்வருந்தினார்கள். ஆனால் இயேசுவின் முதல் வருகையையோ இஸ்ரயேலர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் எப்படிபுரிய வைத்தாலும் புரிந்துக்கொண்டாலும் அல்லது நம்பத்தகாததாக இருந்தாலும், விநோதமாக இருந்தாலும், இந்த புத்தகம் முழுவதும் உண்மையையே நிலைநிறுத்துகிறது. ஒருவேளை, பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் இப்படிப்பட்ட காரியங்களைக் காண்பது அறிதாகவே இருக்கலாம். ஏனெனில், யோனாவின் புத்தகத்தில் ஒரு சம்பவத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும், நன்மைகளையும், கட்டுப்படுத்தும் தெய்வீக பிரசன்னத்தையும் காணமுடிகிறது. ஒரு நடிக்கப்பட்ட தீர்க்கதரிசனமாக இந்த புத்தகத்தை காணமுடிகிறது. அதில் உள்ள பாத்திரங்கள் தங்களை குறித்து அறியாதவர்களாகவும், பரிசுத்த ஆவியின் கருவிகளாகவும், தங்களுக்குப்புரியாத பாத்திரங்களில்

நடித்திருக்கிறார்கள். ஒரு நாடகத்தை மிக அழகாவும், அற்புதமாகவும் வடிவமைத்து அதை பதிவுசெய்து, உயிர்த்தெழுதலின் விசேஷித்த தீர்க்கதரிசி என்று குறிப்பாக யோனாவை எந்நாளும் மகிமைப்படுத்தியிருக்கிறது.

## அதிகாரம் 1
## தேவனைவிட்டோடுதல்

அந்த மிகப்பெரிய கப்பல் மத்தியதரைக்கடல் துறையின் அருகில் மிதந்துக்கொண்டிருந்தது. ஜனக்கூட்டம் கப்பலின் மேல் பகுதியில் சரக்கு பெட்டிகளை பெரும் கட்டுகளாகவும், மூட்டைகளாகவும், மற்ற வியாபார பொருட்களாலும் நிரப்பிக்கொண்டிருந்தனர். அந்த கப்பலின் தலைவர், கப்பல் துறையில் நின்றுகொண்டு வியாபாரிகளோடு அவர்களுடைய சரக்குகளைப்பற்றி சரளமாக வாதிட்டுக்கொண்டும், அவ்வப்போது அங்கு வேலைசெய்த கூலியாட்களை விரட்டிக்கொண்டும் இருந்தார்.

பொன்னிற மணலை கரையாகக் கொண்ட நீலநிறக் கடலும், அதற்கு மேலே நின்ற வெள்ளைநிற யோப்பாவின் வீடுகளும், அதைச் சுற்றியுள்ள பசுமையான மலைகளும் மிகஅழகாகக் காட்சி அளித்தது. கடலின் பெரும் அலைகள் பாறையை மோதி கப்பலை சற்று அசையச் செய்ததுமன்றி, மட்டமான கரையில், வெண்மையான நுரையைத் தள்ளியது. உஷ்ணமான வெயில் கடற்கரை மணலைக் குளிப்பாட்டியது. அங்குள்ள நடைபாதைகள் அனலை பிரதிபலித்து, சிறிய சுழல்காற்றை அங்கும் இங்கும் வீசச்செய்தது.

காதேப்பேர் ஊரைச்சேர்ந்த யோனா தீர்க்கதரிசி, இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில் தேவன் தனக்குக் கொடுத்த பணியிலிருந்து விரைந்தோடிவந்தார். *"அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் - நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி, அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்."*

சத்தியத்திற்கு சாட்சி கொடுப்பதே இந்த சம்பவத்தின் எளிமையான கருத்தாகும். தேவனுடைய கட்டளைகளை இவ்வளவு துணிகரமாக மீறினதைக் குறித்து எப்போதாவது இவ்வளவு வெளிப்படையாகவும், விபரமாகவும் பதிவு செய்யட்டுள்ளதா ? இந்த செயலுக்கு எந்த விதமான சாக்குபோக்கு சொல்லவும், நீதிக்காக

மன்றாடவும் இடமும் இல்லை, வாய்ப்பும் இல்லை. இந்த மனுஷனைக் குறித்து சொல்லப் போனால், கொடுக்கப்பட்ட இடத்தில், கொடுக்கப்பட்ட வேலையை, துணிகரமாக நிராகரித்து, அந்த வேலையை இனி ஒருபோதும் செய்யமுடியாத அளவுக்கு அவர் பூமியின் மற்றொரு எல்லைக்குச் செல்ல முடிவெடுத்தார்.

தீர்க்கதரிசியாகிய யோனா, கலிலேயாவில் உள்ள நாசரேத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள காதேப்பேரிலிருந்து வந்தவர். யோனா புத்தகத்தைத்தவிர வேதாகமத்தில் 11இரா 14 :24-27ம் வசனங்களில் மட்டும் அவர் பெயர் காணப்படுகிறது. இஸ்ரயேலில், தொலைந்த சில பகுதிகள் மீண்டும் மீட்கப்படும் என்று இதில் முன் அறிவிக்கப்பட்ட காரியங்கள் இரண்டாம் யெரோபெயாம் காலத்தில் நிறைவேறியது. எலிசாவின் மரணத்திற்கு கொஞ்சகாலத்திற்கு முன் யோனா வாழ்ந்திருக்கவேண்டும். இது கிட்டத்தட்ட கி.மு 800 ஆம் வருடமாக இருக்கவேண்டும். அவருடைய வாலிபகாலத்தில் எலிசாவின் சீஷர்களின், "தீர்க்கதரிசிகளின் புத்திரரில்" ஒருவராக, யோர்தான் பள்ளத்தாக்கிலும், கலிலேயாவிலும் கடுமையான பக்தி வைராக்கியத்தோடு வாழ்ந்திருக்கக்கூடும். தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலிருக்கும் ஒரு மனுஷனை தேர்ந்தெடுப்பது, நிச்சயமாக தேவனுக்கு ஏற்றதாக இருந்திருக்கும். தேவன் பேரில் தங்களுடைய விசுவாசத்தை பயமின்றி, பக்தி வைராக்கியத்தோடு வெளிப்படுத்த கலிலேயர்கள் மிகவும் துணிவுள்ளவர்களாக இருந்தார்கள். இந்த சம்பவங்களின் முடிவுபாகத்திலும் யோனாதாமே தைரியமுள்ளவராகக் காணப்படுகிறார். இப்படியிருக்க, அவர் தர்ஷீசுக்கு விரைந்ததன் காரணம் என்ன ? அவர் பயந்ததினால் அவர் வேலையை நிராகரிக்கவில்லை. அந்த பணியைச் செய்ய அவர் மிகவும் உண்மையுள்ளவராக இருந்தார். மேலும் அவர் தர்ஷீசுக்கு ஓடிப்போவதால், தேவனுடைய பார்வையிலிருந்து மறைந்து விடுவார் என்பதும் அவருடைய நோக்கம் அல்ல. அவர் தேவனைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். தேவனுடைய நற்செய்தியை புறஜாதிகளுக்கு அறிவிக்கக்கூடாது என்ற எண்ணமும் அவருக்குள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், கப்பலில் உள்ள ஜனங்களுக்காக தன்னுடைய ஜீவனையே கொடுக்க துணிந்தவர். நிச்சயமாக இப்படிப்பட்ட எண்ணங்களை கொண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை.

அசீரியர்களால் இஸ்ரயேல் ஜனங்களுக்கு உண்டான பயத்தை தெளிவாக புரிந்து கொண்டால், யோனாவின் பயணத்திற்கான காரணத்தை அறிந்துக்கொள்ளலாம். அசீரியர்களைப் போல கொடூரமானவர்களும், காட்டு மிராண்டிகளும், மனசாட்சி இல்லாதவர்களும் ஒருவரும் இல்லை. அவர்களின் வெற்றிகரமான படைகள் காணப்பட்ட இடங்களில், அழிவு, பாழ்கடிப்பு, வேதனைகள், கொடுமைகள் காணப்படும். துரதிஷ்டமாக, அவர்களால்

சிறைபிடிக்கப்பட்டவர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார்கள், அதிலும் தப்பித்தவர்களை மீண்டுமாக அவர்கள் சொந்த தேசத்திற்குவராதபடி, அந்த ஏக்கத்திலே அவர்கள் மரிக்கும்படி வெகு தூரத்திற்கு நாடு கடத்தப்பட்டார்கள். யோனாவின் நாட்களுக்கு சுமார் நூறு வருடங்களுக்குபின் அசீரியர்களால் சிறைபிடிக்கப்பட்ட "பத்து கோத்திரம்" மீண்டுமாக தாய்நாடு திரும்பவில்லை.

யோனாவின் நாட்களில் அசீரிய சாம்ராஜ்யம் உறுதியற்ற நிலையில் இருந்தது. வடக்கில் மேதியர்களும், புறதேசத்தார்களும், தெற்கில் பெர்சியர்களும் அவர்களை பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்ட திகிலாத்பிலேசர், சர்கோன், மற்றும் சனகரீப் ஆகிய மூன்று பெரிய இராஜாக்களும், அசீரியாவை திரும்பக் கட்டி எழுப்பவும், கடந்துபோன அதனுடைய ஆதிகாலத்து வல்லமையை திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு முயற்சிக்காமலும் இருந்தார்கள். இந்த காலத்தில் அசீரியாவின் ஆளுநர்கள் உள்நாட்டு பிரச்சனைகளிலும் அவர்களை சுற்றியுள்ள எதிராளிகளினாலும் ஒடுக்கப்பட்டார்கள். இதன் விளைவாக, அடிமைத்தனத்திலிருந்து, விடுதலை பெற்ற இஸ்ரயேல் ஜனங்கள், இனி ஒருபோதும் அசீரியா வல்லமையை பெற்று முன்பு இஸ்ரயேலை அழித்ததுபோல, இனி ஒருநாளும் நடக்காது என்று மகிழ்ச்சியோடு சுதந்தரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில், இவர்கள் அசீரியரின் அழிவுக்காக அதிகமதிகமாக வேண்டுதல் செய்திருந்தார்கள். நீதியின்மேல் அசையா நம்பிக்கை வைத்திருந்த இஸ்ரயேலர், அசீரியாவும் அதனுடைய மிகப் பெரிய பட்டணமாகிய நினிவேயும், தங்களுடைய பாவங்கள் முழுமையாக நிரப்பப்பட்டதால், நீண்ட காலமாக எதிர்ப்பார்த்திருக்கும் நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வந்தது என்று எண்ணி அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தார்கள். யோனாவின் மரணத்திற்கு 200 வருடங்களுக்குப்பின் தீர்க்கதரிசியாகிய நாகூம், இந்த ஏக்கங்களுக்கான காரியத்தை விளக்கமான முறையில் குரல் கொடுத்தார். - "கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன், கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறர், உக்கிரகோபமுள்ளவர், கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காக கோபத்தை வைத்துவைக்கிறவர்...." (நாகூம் 1: 2...)

இவ்வளவு ஆழமான உணர்ச்சிகளைக் கொண்ட சிந்தையோடு இருந்த யோனா - நினிவே பட்டணத்தாரின் மனந்திரும்புதலுக்கேற்றபடி பிரசங்கிப்பதற்காக, அவர் பெற்ற தெய்வீக பணியைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். ஒரு பக்கத்தில் அவர்களுடைய துன்மார்க்கம் தேவனுக்கு எட்டியது என்றும், அதற்கான தண்டனையை அவர் கொடுக்கக்கூடிய நேரம் வந்து விட்டது என்றும், ஒவ்வொரு உண்மையான இஸ்ரயேலர்களும் மிக வாஞ்சையோடு

எதிர்ப்பார்த்த அழிவை அவர்கள் பெறப்போகிறார்கள் என்றும் எண்ணி அவர் சந்தோஷப்பட்டார். மற்றொரு பக்கத்தில் யோனாவின் பிரசங்கம் வெற்றி அடைந்து, நினிவே பட்டணத்து ஜனங்கள் மனந்திரும்பிவிட்டார்கள் என்றால், என்ன செய்வது ? யோனா தேவனைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். மனந்திரும்பினால், இவர்கள் நிச்சயம் பிழைப்பார்கள் என்றும், சாகிறவனுடைய சாவை தேவன் விரும்புகிறதில்லை என்றும் யோனா அறிந்திருந்தார். (எசேக் 18:31-32) தேசிய அளவில் மனந்திரும்பினால் அசீரியர்கள் மேல் வரும் தண்டனையைக் குறித்து எச்சரிப்பு தடை செய்யப்படுமே, இவை அனைத்திற்கும் யோனாவின் பிரசங்கம் காரணமாகிவிடுமே. அசீரியர்கள், இஸ்ரயேல் ஜனங்களின் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தியதற்கு எந்த விதமான பழிவாங்குதலுக்கும் வாய்ப்பில்லாமல் போய்விடுமே. மேலும் இவர்கள் மனந்திரும்பினால், அவர்களின் பழைய வழிக்கு எளிதில் திரும்பிவிட்டால், மீண்டும் இஸ்ரயேலர்களைத் துன்பப்படுத்த துவங்குவார்களே என்று அவர் யோசித்ததினால் நினிவேக்கு போகதயங்கினார். ஆகவே , அவருடைய தோல்வியை நினைத்து அவர் அஞ்சாமல், அவருடைய வெற்றியை நினைத்து அவர் அஞ்சினார். ஏனெனில், தேவன் மிகவும் கிருபையுள்ளவர் என்று அறிந்திருந்தார்.

இப்பொழுது ஒரே ஒரு காரியத்தை மட்டுமே செய்யமுடியும். இந்தப் பணியை செயலாற்ற இயலாத அளவுக்கு அவர் நினிவேயைவிட்டு எவ்வளவு தூரம் போகமுடியுமோ அவ்வளவு தூரம் போகவேண்டும். இந்நேரத்தில் தேவன் மீண்டுமாக இவர்கள் செய்த கொடுமைகளை எண்ணி, அவர்கள் இப்படிப்பட்ட கொடூரமான தண்டனைக்கு உரியவர்கள் என்று அவர் மீண்டும் ஒருமுறை சிந்திக்கவேண்டும் என்று யோனா எதிர்பார்த்தார். எந்த சூழ்நிலையிலும், யோனா நினிவேக்கு போகாவிட்டால், தேவனுடைய எச்சரிப்பின் செய்தி அங்குச் செல்ல வாய்ப்பில்லை, அவர்களுக்கு இந்த செய்தி காதுகளில் எட்டாமலிருந்தால் இவர்கள் மனந்திரும்ப வாய்ப்பில்லை, இவர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை குறித்த காலத்தில் நிச்சயமாக அவர்களை வந்துசேரும் என்று எண்ணி அவர் தர்ஷீசுக்கு விரைந்தார்.

பழங்காலத்து மக்களுக்கு தர்ஷீசு பட்டணம் ஒரு இரகசியமாகவே இருந்தது. காதேப்பேர் எல்லைக்குள் இருந்த தாண் மற்றும் செபுலோன் கோத்திரத்தார் தர்ஷீசு பட்டணத்தின் கதைகளைப்பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். தீரு மட்டும் சீதோன் பட்டணங்களின் அருகாமையிலிருந்தாலும், அங்குள்ள வியாபாரிகளோடு எந்த விதமான தொடர்பற்றவர்களாக இருந்தார்கள். அவர்களில் அநேகர் பூமியின் எல்லைகளுக்கு கப்பல் பிரயாணமாக அவர்களோடு சேர்ந்து சென்றார்கள் என்று பழையஏற்பாட்டின் காலகுறிப்புகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (ஆதி 49:13, நியா 5:17,

எசே 27:19) இந்த பிரயாணிகள் கடலுக்கு அப்பால் நடக்கும் அற்புதமான கதைகளையும் கொண்டுவந்தார்கள். இதில் ஹெர்குலஸ்னுடைய தூண்களைப் பற்றியும், மேற்கு கடலுக்கும், வாயிலில் உள்ள காவலாலர்கள் பற்றியும், பொன் தீவுகளைப் ( அசோரஸ்) பற்றியும், மண்கடலைப் பற்றியும், மேலும் இந்த கடலில் செல்லும் கப்பல்கள் வேகமாகச் சென்று மீண்டுமாக திரும்புவதில்லை என்ற விபரங்களைப் பற்றியும், வடக்கில் உள்ள டின் தீவுகளைப் பற்றியும், அரிதான உலோகங்கள் கிடைக்கும் கிரேட் பிரிட்டனைப் பற்றியும் செய்திகள் அடங்கும். கானானியர்களும், இஸ்ரயேலர்களும் இப்படிப்பட்ட அற்புதமான கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்பதால், மேற்கில் நீண்டதூரம் பிரயாணம் செய்யும் சரக்கு கப்பல்களை வேடிக்கை பார்ப்பதற்கு அவர்கள் என்றுமே சோர்ந்து போனதில்லை. அவைகளின் உண்மையான இலக்குக்கு ஏற்றபடி, "தர்ஷீசின் கப்பல்கள்" என்று அழைக்கப்பட்டது. மேலும் பழையஏற்பாட்டில் இதே பெயர் தொடர்ந்து காணப்படுகிறது. கடலில் மிதக்கும் மிகப் பெரிய கப்பல்கள் அனைத்துமே "தர்ஷீசின் கப்பலாகவும்", தூரதேசங்கள் அனைத்துமே தர்ஷீசு பட்டணம் என்றும் அழைக்கப்பட்டது. அவர்கள் திரும்பி வந்தபோது, கொண்டுவந்த சில பொருட்களின் பட்டியல் பழையஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆபிரிக்காவின் தந்தங்கள், பிரிட்டிஷில் உள்ள டின், வாசனையான பிசின், மற்றும் அநேகபொருட்கள் கொண்டுவரப்பட்டது. கிப்ரால்ட்டரின் கடற்கரைக்கு புறம்பே உள்ள இடங்கள் பொதுவாக தர்ஷீசு என்று அழைக்கப்பட்டது - மேற்கு ஆபிரிக்கா, அசோர்ஸ், மேற்கு இந்தியா, தெற்கு அமெரிக்கா, மேற்கு ஸ்பானியா, தெற்கு பிரிட்டன். பொதுவாக பிரிட்டன் வணிகத்தில் பேர்போன நாடாக இருந்தபடியால், தீர்க்கதரிசியாகிய யோனா ஏறிய கப்பல் மீண்டுமாக கரைக்கு வந்து சேருவதற்கு எந்த விதமான வாய்ப்பும் இல்லை. தேவனுடைய அற்புதமான அந்த தெய்வீகக் குறுக்கீடு ஏற்படவில்லை என்றால், யோனா நிச்சயமாக தகர சுரங்க வேலைசெய்பவர்கள் அல்லது தெற்கில் உள்ள மேய்ப்பர்களோடும் அவருடைய இறுதி நாட்களைக் கழித்திருப்பார்.

தர்க்கங்களையும், பிரச்சனைகளையும் கவனித்துக்கொண்டிருந்த கப்பல் தலைவர் , முன்பின் அறியாத ஒருவர் கப்பலில் பயணிப்பதற்கு வாய்ப்பு கேட்டு கொண்டிருந்தை கவனித்தார். இது எப்போதும் நடக்கக்கூடிய காரியமாக இருந்தது. பயணிகள் கப்பல் அதிகமாக இல்லாதபோதும், அதிக பயணிகள் இல்லாதபோதும் மட்டுமே இப்படிப்பட்ட பயணங்கள் சாத்தியமாகும். பொதுவாக அடிக்கடி சட்டத்தின் பிடியிலிருந்தும், குண்டர்களிடமிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கும் இப்படிப்பட்ட பயணங்களை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இப்படிப்பட்டவர்கள் கேட்கக்கூடிய பணத்தைக் கொடுத்து பயணிப்பார்கள். யாரும் இக்கட்டான எந்த கேள்விகளையும் கேட்காதபடிக்கும்,

எந்த விதமான பிரச்சனைகள் வராதபடிக்கும், தேவையான பணத்தைக் கொடுத்து பயணித்தார்கள். அதேபோல் கப்பல் தலைவர்கள் எதிர்ப்பார்த்த பணத்தைக் கொடுத்து, அதாவது, "கூலி கொடுத்து" யோனா தீர்க்கதரிசி கப்பல் ஏறினார் என்று 3-ம் வசனம் குறிப்பிடுகிறது. இப்படிப் பட்ட பயணத்திற்கு கொடுக்கவேண்டிய பணம் குறிக்கப்பட்டதாக இருந்திருக்கும். ஏனெனில், பயணத்திற்கு கொடுக்கப்பட்ட பணத்தை பேரம்பேசி கொடுத்ததுபோல் எதுவும் சொல்லப்படவில்லை. ஒப்பந்தங்கள் முடிவடைந்து, கடல் கடந்து செல்வதற்கு யோனா சுதந்திரம் பெற்றார்.

யோனாவின்வீடு, அருகில் இருந்ததினால் தீரு சீதோன் கரையில், "தர்ஷீசு கப்பல்களை" யோனா ஒருவேளை கண்டிருக்கக்கூடும். ஆனால் அந்தகப்பலில் அடியெடுத்து வைப்பது, இதுவே முதல் முறையாக இருந்தது. கரையிலிருந்து கப்பலுக்கு ஏறிச்செல்லும் பாலத்தை கடப்பதற்கு நிச்சயமாக, அவர் தயங்கியிருக்கவேண்டும். அந்நேரம் வரைக்கும், மனந்திரும்பி, தேவனுடைய பணியைச் செய்ய வாய்ப்புகள் இருந்தது. கப்பல் கரையைக் கடந்து விட்டால், இனி ஒருபோதும் வீடு திரும்ப முடியாது. சரியோ தவறோ அவர் நிர்ணயித்தபாதையில், தேவன் தனக்குக் கொடுத்த ஊழியத்தைவிட்டும், தேவனை விட்டும் இன்னும் வெகு தூரத்திற்கு அவர் செல்லவேண்டும். அவர் விரும்பினாலும்கூட தேவனுடைய பணியைசெய்வதற்கு அவரால் திரும்பிவர முடியாது. அந்நேரத்தில் அவர் எப்படிப்பட்ட மனநிலையில் இருந்திருப்பார் என்று தெரியவில்லை. முடிவில், "*தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போக....*" அசையாஉறுதியோடு கப்பல் ஏறினார்.

பழங்காலத்து கப்பல்களைபற்றிய தெளிவான அறிவைப் பெற்றுகொள்ள, வேதாகம வல்லுனர்களைக் காட்டிலும், இந்த உலகத்தின் பொறியியல் கலை ஆராய்ச்சியாளர்களுக்கு நாம் அதிகக் கடமைபட்டிருக்கிறோம். பொதுவாக கல்வி அலுவலக வல்லுநர்கள் அதிகமாக இராஜாக்களைப்பற்றியும், யுத்தங்களைப்பற்றியும் யோசித்துவிட்டு வீடுகள், கப்பல்கள், மற்றும் பொதுஜனங்களின் வாழ்க்கையைக் குறித்து கவனியாமல் விட்டு விடுவார்கள். ஆனால் ஆராய்ச்சிக்குரிய வேலைக்காரரின் தொழில்நுட்ப கண்ணோட்டத்தில் பழங்காலத்து கப்பல்களைப்பற்றிய அநேக அறிவுப்பூர்வமான விவரங்கள் கிடைத்துள்ளது. (Torr's "Ancient Ships"என்ற கப்பல் இந்த பாடத்திற்கு ஏற்ற ஆதாரமாக இருக்கும்.) இதுபோன்ற கப்பலில் யோனா பயணித்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட கப்பல்கள் விசேஷமாக சரக்குகளை ஏற்றிச் செல்லகட்டப்பட்டது. இவைகள் அடிமைகளாலும், குற்றவாளிகளாலும் துடுப்புகள் கொண்டு செலுத்தபெறும் ஒரு தளமுள்ள கப்பலாக இருந்தது. இவைகள் 200அடி நீளமும், தண்ணீர் மட்டத்திலிருந்து சுமார் 40 அடி உயரமாகவும் இருந்தது. அதற்கு மேல் வளைவான கப்பலின்

முகப்பும், கப்பலின் பின்பகுதியும் பத்திலிருந்து பதினைந்து அடி உயரமாகவும் இருந்தது. அந்த வளைவான கப்பலின் முகப்பு செத்துக்கப்பட்ட ஒரு அலங்கார பொம்மையின் தலையில் முடிவடைந்தது. உயரமானதும், வலுவான ஒரு பாய்மரக் கப்பலின் மத்தியில் நின்றது. உலோகத்தாலான கப்பலின் பாய்மரக்கழி, சதுரமான கப்பற்பாயை சுமந்துக் கொண்டிருந்தது. இதற்கு துணையாக சிறிய பாய்மரங்களும் இருந்தன. இந்தபெரிய பாய்மரம், வீசப்படும் காற்றை மட்டுமே சார்ந்திருந்தது. இந்த பாய்மரத்தை கயிறுகளைக் கொண்டு மிகதிறமையாக மாலுமிகள் இயக்கினார்கள். ஆயினும், மத்திய தரைக்கடலில் காற்று அடியாதபடிக்கு சில நாட்கள் ஸ்தம்பித்து நிற்கும். ஆகவே பாய்மரங்களை மட்டுமே நம்பியிருக்கும் கப்பல்கள் சீராக பயணிக்க இயலாததினால், கப்பலைச் செலுத்த துடுப்புகளும் கூடுதலாக வைக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட கப்பல்களுக்கு 30 அடி நீளத்தில் 300 துடுப்புகளும், அதைசெலுத்த 300 துடுப்பு வலிப்பவர்களும், கப்பலின் அடிதளத்தில் அமர்ந்து தண்டு வலிப்பார்கள். கடும் புயலின்போது, இவர்களோடு அல்லது இவர்களுக்கு கீழுள்ள இடத்திலோ அல்லது சரக்குகள் இருந்த இடத்திலோ யோனா அயர்ந்த நித்திரை செய்திருக்க வேண்டும். அந்த கப்பலை திசை அறிந்து செலுத்த, இரண்டு நீண்ட துடுப்பகள் பயன்படுத்தப்பட்டது. இந்த கப்பல்கள் ஒருமணி நேரத்திற்கு எட்டு மைல் தூரம் செல்லக்கூடியதாக இருக்கிறது என்று பல எழுத்தாளர்கள் இந்த கப்பலைப்பற்றி பழைய பதிவுகளில் எழுதியுள்ளார்கள். அந்தகப்பல் எங்கு சென்றாலும், கரையைப் பார்க்கும் தூரத்தில் செலுத்தப்படுமாம். இரவு வரும்போது நங்கூரத்தைப் போட்டு கப்பல் நிறுத்தப்படும். மீண்டும் அடுத்த நாள் காலை கப்பலைச் செலுத்துவார்களாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோப்பாவிலிருந்து தர்ஷீசுக்கு பயணிப்பதற்கு நான்கிலிருந்து ஐந்து மாதங்கள் செல்லும்.

இப்போது அந்த கரையிலிருந்த சிறிய ஜனக்கூட்டத்தின் ஆரவாரம் அதிகரித்தது. கப்பலில் எல்லா சரக்குகளும் ஏற்றப்பட்டது. கப்பலோட்டிகள் தங்களுடைய நீண்டநாள் பிராயணத்திற்கு ஆயத்தப்பட்டார்கள். அவர்கள் மீண்டுமாக வீடு திரும்ப பதினெட்டு மாதங்கள் செல்லும். நகரத்தின் மத்தியில், மலைஉச்சியல் உள்ள தாகோன் ஆலயத்தில் பலிசெலுத்தும் ஆசாரியர்கள் ஒரு கூட்டமாக வந்திருந்து, இந்த தாகோன் இவர்களுக்கு சாதகமான பயணத்தையும் வணீகத்தையும் தரும்என்று நம்பி பலிசெலுத்த வந்தார்கள். அதே நோக்கத்தில் பாகாலையும் வழிபட்டார்கள்.

ஏனெனில், அந்நேரத்தில் இரண்டு நாட்களாக பாகாலின் வழிபாடு இஸ்ரயேலுக்குள் இயல்பாக நடந்துகொண்டிருந்தது. இதற்கு இடையில் நல்ல தோற்றமளித்த வாட்டசாட்டமான மூன்று பேர், தண்டு வலிப்பவர்கள் மத்தியில் தங்களுடைய

இடத்தில் வந்து மர கப்பலுக்குள் நுழைந்தார்கள். இவர்கள் பிரிட்டனை சார்ந்தவர்கள். லுடு என்ற தங்களுடைய தெய்வத்தை வழிப்பட்டபின் நேரே கப்பலுக்குள் வந்தார்கள். மிகப் பெரிய தெய்வமாக, தொலை தூரத்திலிருக்கும் அதை வழிப்பட்டு வந்தார்கள். ஆனாலும், அஸ்த்ரோத், பாகால் மற்றும் தாகோனை வழிபடும் இந்த தேசத்தில் அந்த தெய்வத்தைப்பற்றி அறியாதிருந்தார்கள். ஆகவே யோப்பாவில் இதற்குரிய ஆலயம் ஏதும் இல்லை. இருந்தபோதிலும், சரக்குகளை ஏற்றி இறக்கும் இடத்தின் ஒரு மூலையில் இதற்கான ஒருசிறிய கோவில் இருந்தது, அங்கு சென்று தங்களுடைய தாய்நாட்டிற்கு பத்திரமாக கொண்டுசெல்வதற்கு அவர்களுடைய பொருத்தனைகளைச் செலுத்தியபின் அங்கு வந்தார்கள்.

அந்த சமுதாயத்தின் மதிப்புக்குரிய கப்பலின் தலைவர், தனிப்பட்ட முறையில் தாகோனுக்கு தன்னுடைய வேண்டுதல்களை செலுத்தினார். இவர் உலகத்தின் அனைத்து பகுதிகளையும் சுற்றி வருவதினால், அநேக மதங்களையும், வழிபாடுகளையும் கண்டிருக்கவேண்டும். ஆகவே அவர் எல்லாருக்கும் மதங்களுக்கு உண்டான உரிமைகளை அளித்தார். ஏனெனில், சிலமணி நேரங்களுக்குப்பின் யோனாவிடம் அவர் பேசின போது, அனைத்து மதங்களுக்கும் ஒரே விதமாக அவர் மதிப்புகொடுத்த விதத்தை நாம் காணலாம். ஒருவேளை பொதுவாக எந்த தெய்வங்களும் வழிபடாமல் விடுபடக்கூடாது என்ற எண்ணம் அவருக்குள் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் கூடுமானவரைக்கும் அனைத்து தெய்வங்களின் ஆசீர்பெற்று எந்தவிதமான இடற்பாடுகளும் இன்றி கப்பல் பயணத்தை பாதுகாப்பாக நடத்திசெல்லவேண்டும் என்பது அவருடைய முக்கிய எண்ணமாக இருந்தது.

வானத்தையும் கடலையும் விரைவாக கண்ணோக்கிய கப்பலின் தலைவர் கப்பலின் பின்புறத்தில் நின்றுகொண்டு கப்பலை அவிழ்த்துவிடும்படி கட்டளைக் கொடுத்தார். கட்டிவைக்கப்பட்டிருந்த கப்பலின் நங்கூரம் கரையில் வீசப்பட்டது. எதிரில் மிதந்துகொண்டிருந்த சிறிய படகுகளுக்கு சைகை காட்டப்பட்டது. மேலும் அதில் இருந்த மனிதர்கள் தங்களுடைய துடுப்பைச்செலுத்த, கப்பல் கரையைவிட்டு மெதுவாகச் சென்றது.

அந்தகப்பல் அங்குள்ள பாறைகளில் மோதிவிடாதபடி, கப்பலோட்டிகள் சுற்றிநின்று கவனமாகபார்த்துக் கொண்டிருந்தார்கள். கப்பல் தலைவரின் சைகையின்படி, மாலுமிகள் தங்களுடைய துடுப்புகளை வேகமாக செலுத்தினார்கள். மற்றொரு பக்கம் பெரிய பாய்மரத்தை உயர்த்தினார்கள். கப்பல் தடையின்றி சென்றது.

அங்குள்ள பாறைகள் முழுவதும் மறைந்தது. இறுதியான சைகை கொடுக்கப்பட்டது. இழுக்கப்பட்ட கயிறுகள் தளர்த்தப்பட்டு கீழே விடப்பட்டது. மற்ற மூன்று சிறிய கப்பல்களும் திரும்பி, கரையை நோக்கிச் சென்றது.

கட்டளை பிறந்தவுடன் நூற்றுகணக்கான துடுப்புகள் செலுத்தப்பட்டது. பெரிய பாய்மரம் சீராக விரிந்தது. அப்போது கப்பல், மேற்குநோக்கி கடலைப்பிளந்து கொண்டு விஸ்தாரமாகச் சென்றது. யோனாவின் பயணம் துவங்கியது.

மணல் நிறைந்த கடற்கரை, வெள்ளை நிற வீடுகள், பசுமையான மலைகள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. இடது பக்கமாக, கப்பலின் பின்புறம் சாய்ந்த யோனா, அங்கு காணப்பட்ட கர்மேல் பர்வதத்தைப் பார்த்தார். வெகுநாள் செல்லவில்லை, அங்கு தான் பாகாலின் தீர்க்கதரிசிகளை எலியா கொன்று போட்டார். அதற்குபின் அவர் சீனாய் மலைக்கு ஓடினாலும் அவர் திரும்ப வந்துவிட்டார். ஆனால் யோனா, வீடுதிரும்பப் போவதில்லை. அவருக்கு அந்த வாய்ப்பும் இனி இருக்கப்போவதில்லை. அவர் தன்னுடைய ஜனங்களுக்காக, தானே மனப்பூர்வமாக நாடுகடத்திக் கொண்டார். "ஒரு முழு ஜாதி அழிவதைக் காட்டிலும் ஒரு மனுஷன் மரிப்பது மேல்" என்றும் இதற்கான தக்க முடிவு இதுவே என்றும் யோனா நினைத்தார். அவருக்கு முன் எப்படிப்பட்ட வாழ்க்கை இருந்தது என்று அவர் அறியாதிருந்தார். அருமையான இஸ்ரயேல் தேசமும், அதனுடைய சுபிக்ஷமும், அதனுடைய வரலாறும் இனி என்றுமே அவருடைய கண்முன் வரப்போவதில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். அவருடைய ஜனத்திற்காகவும், அசீரியர்கள் மேல் வரப்போகிற தெய்வீக நியாயத்தீர்ப்புக்காகவும் அவர் என்றுமே இந்த இடத்திற்கு வரக்கூடாது என்று முடிவெடுத்தார். மீண்டுமாக, அவர் நினிவே ஜனங்களுக்காக, அழைக்கப்படாதபடிக்கு வெகு தூரத்திற்கு செல்லவேண்டும் என்றும் முடிவு செய்தார்.

உச்சி வெயில் வீசியது, கடைசியாகக் காணப்பட்ட கர்மேல் பர்வதமும் கடலில் மூழ்கி, தொடு வானத்திற்குப் பின் மறைந்தது. பாய்மரத்தை திறமையாக செலுத்திக் கொண்டிருந்த மாலுமிகள் அவர்கள், தங்களது பாட்டைப்பாட துவங்கினார்கள். மேற்கு நோக்கி தர்ஷீசுக்கு கப்பல் சீராகப் பயணித்தது.

யோனா மிகவும் விரக்தி அடைந்தவராக, தன்னுடைய சகபயணிகளிடமிருந்தும், ஊழியக்காரர்களிடமிருந்தும் தனித்துபோய், கப்பலின் அடிதளத்தில் தனியாக தன்னுடைய நெஞ்சின் பாரத்தை தனியே சுமந்தவராக துக்கம் மிகுதியானதால், ஆழ்ந்த நித்திரை அடைந்தார்.

## அதிகாரம் - 2

## கடும் புயல்

நம்முடைய கவனத்தை ஈர்க்கும் உண்மை என்னவெனில், கடலைப் பற்றிய இரண்டு சம்பவங்கள் மட்டுமே வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று புதியஏற்பாட்டிலும் மற்றொன்று பழையஏற்பாட்டிலும். இரண்டும் ஒரே

இடத்தில் நடந்தது. இரண்டு சம்பவங்களும் அதில் பயணித்தவர்களின் இரட்சிப்பைக் குறித்து தெய்வீக குறுக்கீடு செயல்பட்டது. இந்த இரண்டு சம்பவங்களிலும் ஏற்பட்ட புயல் அனைவரையும் விழுங்கத்தக்கதாக பயமுறுத்தியது. ஆனால் அந்த இரண்டு சம்பவங்களிலும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பவுல் ரோமாபுரிக்கு செல்லும்போது, வழியில் ஏற்பட்ட கப்பல் சேதமும் (அப் 27) யோனாவின் பயணமும் இணையாக உள்ளது. ஆனால் பவுலின்கப்பல் முழுமையாக சேதம் அடைந்தது, யோனாவின் கப்பலோ பத்திரமாக கரையை அடைந்தது.

*"கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார், அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று."* (வசனம்- 4) இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளும், குறிப்பான அர்த்தங்களும் அந்த சம்பவத்தை மிகத் துல்லியமாக புரிந்து கொள்வதற்கு நமக்கு உதவி செய்கிறது. வசந்த காலத்தில், கிழக்கு மத்தியகடலில் வீசியகாற்று நீண்டதூரம் பிரயாணமாகசென்ற கப்பல்களை அதன் வழியில் வேகமாக பயணிக்க உதவி செய்யும். நிலப்பகுதிகளில் உள்ள சீதோஷ்ணநிலைகளைப் பொறுத்து, சில நேரங்களில் ஆசியா மலைகளிலிருந்து பலமாக காற்றுவீசும். ஒருவேளை அந்த பலமான காற்று, ஆபிரிக்கா கரையிலிருந்து வந்த சூடான தெற்கு காற்றோடு மோதினால், கடலில் சுழல்காற்றை உருவாக்கும். "*கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில்மேதிற்று."* (அப் 27:14) என்று வாசிக்கிறோம். ஏறக்குறைய ஆயிரவருடங்களுக்கு பின், அப். பவுல் பயணித்த கப்பல், இந்த சுழல்காற்றில் சிக்கி உடைந்தது. (மத்தியதரைக் கடலில் வீசும் இதே காற்றை இன்று "லீவென்ட்டர்" என்று அழைக்கப்படுகிறது. வேதாகமத்தில் சொல்லப்பட்டதுபோல இன்றும் அதேபோல் கடலை அலைகழிக்கிறது.) நான்காம் வசனத்தில் "கொந்தளிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தைக்கு சுழல்காற்று என்று பொருள். கிரேக்கில் சொல்லப்பட்ட சரியான ஆங்கில வார்த்தை "டைபூன்" இதற்கு " உடைத்தல் அல்லது துண்டுதுண்டாக உடைவது" என்று பொருள்படும். மிகுந்த அழுத்தத்தோடு, அந்த கப்பலின் மேல்வந்து மோதிய பலமானகாற்று, அந்தபெரிய பாய்மரத்தைக் கிழித்தது. கப்பலின் பலகைகள் துண்டு துண்டாக உடைந்தது. இந்த பயங்கரமான புயலினால், கப்பல் உடையாதபடிக்கு கப்பலோட்டிகள் உடனடியாக பல உபாயங்களைச் செய்து, கப்பலின் கட்டுமானம் உடையாதபடிக்கு, மொத்தமாக கயிறுகளை கப்பலின் முன் பகுதியின் மேல்போட்டு, கப்பலுக்கு அடியில் விட்டு பாய்களை இறக்கினார்கள்.

அந்தபுயல் கப்பலை மேற்கொண்டது என்று அடுத்த வசனம் குறிப்பிடுகிறது. ஏனெனில், அதில் உள்ள கப்பலோட்டிகள் அனைவரும் கப்பலை இலகுவாக்க அதில் உள்ள சரக்குகளை வெளியே எறிந்தவாறு அவரவருடைய தெய்வங்களை நோக்கி குரல் எழுப்பினார்கள். விலையுயர்ந்த இலாபகரமான சரக்குகளை வெளியே எறிவதன் மூலம் அந்த சூழ்நிலையின் அபாயம் தெரிகிறது. 13ம் வசனத்தை நாம் பார்க்கும்போது, கப்பலை பத்திரமாக கரைசேர்க்க தண்டுவலிப்பவர்களை மட்டுமே அவர்கள் நம்பியிருந்தார்கள் என்று தெரிகிறது. *"அந்த மனுஷர் கரைசேரும்படி வேகமாய்த் தண்டுவலித்தார்கள்".* பலமாக வீசிய காற்று, அந்த கப்பலின் பாய்மரத்தை துண்டு துண்டாக கிழித்திருக்க வேண்டும். ஏனெனில், பாய் கிழியாவிட்டால் எப்படியாவது அந்த கப்பலை புயலிலிருந்து தப்புவிக்க முயற்சித்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு வழியும் இல்லாததினால் கரைக்கு கப்பலை கொண்டு வரவேண்டியதாக இருந்தது.

இருண்ட வானத்தின் கீழ் சுழல்காற்றில் சிக்கிய கப்பலை, சீறுகிறபுயல், கப்பலில் மீதியுள்ளவைகளை அலைக்கழித்துக் கொண்டிருப்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். பாய்மரத்தில் இருக்கும் பாய் நாடாக்கள் கிழிந்து, காற்று அடித்து, ஒவ்வொரு பக்கமாக வேகமாக வீசிக்கொண்டு, கப்பலில் இருக்கும் ஒவ்வொருவரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் கப்பல் கடலில் புரண்டுவிடும் அபாயத்தைத் தொட்டது. கப்பலின் அடித்தட்டில் தண்டுவலித்துக் கொண்டிருந்தவர்கள் தங்களால் முடிந்தவரைக்கும் கப்பல் முழுகாதபடி வேகமாக தண்டுவலித்தார்கள். இதற்கு இடையில் கப்பல் தலைவரின் ஆக்ரோஷமான குரல் அவர்களை மேலும் ஊக்குவித்தது.

இவ்வளவு பிரச்சனைகளுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில், கப்பலின் அடித்தட்டில் யோனா அயர்ந்த நித்திரை பண்ணினார். சாதாரண தூக்கத்தில் அவர் இப்படியாக அயர்ந்த நித்திரை செய்யாமல், தனிப்பட்ட முறையில் தன்னுடைய உறுதியான நோக்கத்தில், மிகப் பெரிய பலியை செலுத்தி, அவருடைய மிகுந்த துன்பத்திலிருந்தும், இருதய பாரத்திலிருந்தும், தன்னையே மறந்து, ஆழமான நித்திரைக்குள் சென்றார்.

"நீ நித்திரைபண்ணுகிறது என்ன ? எழுந்திருந்து உன் தேவனை நோக்கிவேண்டிக்கொள், நாம் அழிந்து போகாதபடிக்கு சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான்" கப்பல் தலைவர் அடித்தட்டில் சென்று நித்திரை செய்தவரை எழுப்பி கொண்டுவர வேண்டியதாக இருந்தது. இந்த பணியை செய்தவர் சரியாகச் செய்யாததினால் கப்பலின் தலைவர் நேரடியாக வந்து யோனாவை அழைத்து சென்றிருக்கவேண்டும். ஆயினும் அனைவருடைய துயரத்திற்காக அனைவரோடு சேர்ந்து, அவருடைய தேவனை நோக்கி ஜெபிக்கும்படி

கேட்டுகொள்ளப்பட்டார். மற்றவர்களின் தெய்வங்கள் இவர்களை கைவிட்டாலும், யோனா வணங்கும் தெய்வமாவது அவர்களைக் காப்பாற்றுவார் என்று நம்பிக்கையில் அவர்கள் இப்படி சொன்னார்கள். கப்பலின் தலைவர் மிகுந்த நம்பிக்கையோடு காணப்படவில்லை. ஒருவேளை இப்படிப்பட்ட அநேக புயல்களை முன்னதாகவே அவர் சந்தித்திருக்க வேண்டும். அவைகளிலிருந்து தானாகவே விடுவிக்கப்பட்டு தன்னுடைய திறைமைவாய்ந்த கப்பலோட்டிகளால் தப்பியிருக்க வேண்டும் - இருந்தபோதிலும், இப்போது தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது ஏற்றதாக இருந்தது.

யோனா கப்பலின் மேல் தட்டுக்கு வந்தபோது, இந்த புயலுக்கான காரணங்களைத் தேடி, ஆவேசப்பட்டு கொண்டிருக்கும் திகில் அடைந்த ஜனங்கள் மத்தியில் யோனா தன்னுடைய தேவனை அழைப்பதற்கு எந்த வாய்ப்புகளும் இல்லாதபடியினால் தடுமாறினார். ஏனெனில், அங்கிருந்த மாலுமிகள் புயலுக்கான இயற்கையான காரணங்களைத் தேடுவதை விட்டுவிட்டார்கள். அவர்களுடைய மூடநம்பிக்கையின்படி அந்த கப்பலில் பயணிக்குள் யாரோ ஒருவர் அவருடைய தெய்வத்திற்கு விரோதமாக பாவம் செய்ததினால், அந்த தெய்வத்தின் கோபம் இப்படியாக மூண்டது என்று நம்பினார்கள். ஆகவே குற்றம் புரிந்த மனிதனை கண்டுபிடிக்க வேண்டி கட்டாயம் ஏற்பட்டதினால் அதற்கு தேவையான காரியங்களை யோசித்தார்கள். "*அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் அறியும்படிக்குச் சீட்டுப்போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள், யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது.*"(வசனம் -7)

பழங்காலத்தில் தீர்வுகாணாத கேள்விகளுக்கு சீட்டுபோட்டு பார்ப்பதே பரலோகத்திலிந்து வரும் பதிலாக அனைவரும் எண்ணினார்கள். பொதுவாக சீட்டுகள் இரண்டு துண்டுகள் கொண்ட கட்டை அல்லது உலோகமாக இருந்தது. ஒன்று வெள்ளைநிறமும் மற்றொன்று கறுப்பு நிறமாகவும் இருந்தது. இந்த ஒரு காட்சியை கற்பனை செய்துபார்ப்போம். காற்றின் கொடூரமான சீற்றம், அதன் மத்தியில் தடுமாறிகொண்டிருக்கும் கப்பல், அந்தக் கப்பலை பத்திரமாக கரையில் கொண்டு சேர்ப்பதற்கு, தண்டு வலிப்பவர்களால் எடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்று புரியாமல் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஜனங்கள். அந்த சீட்டுகள் ஒரு பைக்குள் இருந்தன. முதலில் அந்த கப்பலின் தலைவருக்கும், கப்பலோட்டிகளுக்கும் சீட்டுபோடப்பட்டது. கப்பலின் தலைவர் அந்த பைக்குள் உள்ள ஒன்றை எடுத்தார். அதற்குபின் கப்பலோட்டிகளில் ஒருவர் மற்றொன்றை எடுத்தார்.

இருவரும் தங்களுடைய கைகளை திறந்து போது, அதைக்காண அனைவரும் சூழ்ந்தார்கள். கப்பலோட்டி கறுப்பு சீட்டை வைத்திருந்தார் !

மீண்டுமாக இதே செயல் தொடர்ந்தது. பயணிகளுக்கும் மாலுமிகளுக்கும் இடையில் சீட்டுபோடப்பட்டது. அதற்குபின் ஒவ்வொருவருக்கு இடையில் சீட்டுபோடப்பட்டது. இறுதியாக, ஒரு மனுஷனுக்கும் யோனாவுக்கும் இடையில் சீட்டுபோடப்பட்டது. கப்பலில் உள்ள அனைவரும் தங்கள் மேல் பழிவிழவில்லை என்ற திருப்தியோடு இந்த இருவரில் குற்றவாளி யார் என்று அறிவதில் மிக ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள். "*சீட்டு யோனாவின் பெயரில் விழுந்தது*"

*"அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி - யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்கச் சொல்லவேண்டும், உன் தொழிலென்ன ? நீ எங்கேயிருந்து வருகிறாய் ? உன் தேசம் எது ? நீ என்ன ஜாதியான் என்று கேட்டார்கள்."*

எல்லா பக்கங்களிலிருந்தும் கேள்விக்கு மேல் கேள்வி எழுப்பப்பட்டது. பாரம்பரிய ஒழுக்கங்கள் அனைத்தும் ஒதுக்கி வைக்கப்பட்டது. தன்னுடைய தெய்வத்திற்கு எதிராக இவன் புரிந்த குற்றம் என்ன ? அந்த தெய்வத்தை சமாதானப்படுத்த என்ன செய்யவேண்டும் ? ஏனெனில், காலம் தாமதிக்க நேரமில்லையே என்று அனைவரும் பதறினார்கள்.

இந்த கேள்விகளுக்கு எந்த விதமான நியாமான அடிப்படைக் காரணங்களும் இல்லை என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். யோனா புத்தகத்தைப்பற்றி விமர்சிக்கும் ஒரு மாணவன் -"கோபமடைந்த ஜனங்களும், கப்பலோட்டிகளும், யோனாவை சூழ்ந்து கொண்டு, தாங்கள் அனைவரும் மூழ்கிக் கொண்டிருக்கும் அபாயத்திலிருப்பதை உணர்ந்து, இவர் நிமித்தமே கப்பல் தொலைந்து போகிறது என்று எண்ணி சரமாரியான கேள்விகளை அவர்மேல் பொழிந்தார்கள். எந்தவிதமான அடிப்படைக் காரணமுமில்லாமல் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கூடிய சூழ்நிலை யாருக்கும் நேரிடக்கூடாது. ஒருவேளை அங்கிருந்த கப்பலோட்டிகள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இதுவரை அகப்பட்டிராமல் இருந்திருக்கவேண்டும். மேலும், எப்போதும் கப்பலோட்டிகள் எந்தவிதமான நாகரீகத்திலும் சிறந்தவர்களாக இருந்ததில்லை. அதேபோல் இவர்களிடமும் நாகரீகமான செயல்களை எதிர்பார்க்க முடியவில்லை.

இறுதியாக, யோனா தன்னுடைய அனைத்து காரியங்களையும் வெளிப்படையாக அறிவிக்க கட்டாயப்படுத்தப்பட்டார். மிகுதியான விசுவாசம் அவரிடம் இருப்பினும், உலகப்பிரகாரமான காரணத்திற்காகவும், சில விசேஷித்த வாக்குவாதங்களின் நிமித்தமும் இந்த கப்பலில் ஏறினார் என்பதை யோனா அறிவித்தார். தேவனுடைய தீர்க்கதரிசியாகிய இவர் மிகவும் கனப்படுத்தப்பட்டார். இந்த திடீர் பிரயாணத்திற்குமுன் கலிலேயாவில் இவருடைய வார்த்தைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் இந்த தீர்க்கதரிசனம் உண்மையாக நிறைவேறியது என்பதை நாம் அறிவோம். (11இரா14:25) ஆனாலும், இயற்கையான சிந்தையில், நியாயமான காரணங்களையும், நோக்கங்களையும் தனக்குள் அனுமதித்து, ஆவிக்குரிய வழிநடத்துதலை தள்ளிவிட்டார்கள். தேவனுக்கு கீழ்படிந்திருந்தால் இன்னும் அதிகமான வேலைகளை தேவன் நியமித்திருக்க வாய்ப்புகள் இருந்திருக்கும், தேவனுடைய மேன்மையான பணியில் அவருடைய ஊழியத்தைச் செய்வதை விட்டுவிட்டு இப்படிப்பட்ட பேராபத்தை முகமுகமாக சந்திக்கவேண்டியதாக இருந்தது. மேலும் அந்த கப்பலில் உள்ள அறியாஜனங்களும் அழியக் கூடிய நிலை வந்ததை எண்ணி அவர் மிகவும் கலங்கினார். இப்படிப்பட்ட நிர்பந்தமான சூழ்நிலையில் மனுஷருடைய உண்மையான குணம் வெளிப்படுத்தப்படும். அப்போது உலக ஞானமும், அதனுடைய எல்லா முயற்சிகளும் விழுந்துபோகும். அவர் இருந்த சூ்ழ்நிலையை வெளிப்படையாகவும், அவர் தேவனோடு எப்படிப்பட்ட உறவை கொண்டிருந்தார் என்பதையும் மறைக்காமல் அறிவித்தார் - "*அதற்கு அவன் - நான் எபிரெயன், சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான்."* (வசனம் -9)

யோனாவின் வாழ்க்கையில் இந்நிலை மிகப் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இக்காரியங்களை அறிவிக்குமுன் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றக் கூடியவராகவும், தேவனைவிட்டு விலகக்கூடிய ஒரு துரோகியாகவும், அவருடைய கோட்பாடுகளை புறக்கணித்தவருமாக இருந்தார். ஆனால் இப்போது அவர் தன்னையே தேவனுடைய கரத்தில் ஒப்புகொடுக்க ஆயத்தப்பட்டு, அவர் தேவன்மேல் கொண்ட விசுவாசத்தை அறிக்கையிட்டார். "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் மேல்" என்ற வார்த்தைகள் இன்னும் அதிக அழுத்தத்தை கொடுக்கும் அளவுக்கு அவர் அதை ஆழமாக உணர்ந்தார். பரலோகத்திலிருந்து வந்த அந்த புயல்காற்று அலைகழித்தது. குற்றம்புரிந்த தாசனை பின்தொடர்ந்து பிடிப்பதற்கே பரலோகத்தின் தேவன் இதை அனுப்பினார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அனைத்து கப்பலோட்டிகளும் நம்பினார்கள். சர்வவல்லவரான தேவனுடைய ஊழியக்காரனாகிய யோனா மரண தீர்ப்பைதானே நியமித்துக்கொண்டார். ஏனெனில், இந்த கப்பல் முழுமையாக சேதம்

அடைவதற்கும், இந்த பேராபத்திற்கும் இவர் மட்டுமே காரணராக இருந்தார் என்பது கேள்விக்கு இடம் இல்லாமல், உறுதிப்படுத்தப்பட்டது.

*"நீ ஏன் இதைச் செய்தாய் "* என்ற வார்த்தைகளை வாசிக்கும் போது பயத்தால், பதட்டமடைந்த கப்பலோட்டிகளின் சூழ்நிலை தெரிகிறது. (இங்கு பயன்படுத்தப்பட்ட அதே எபிரெய வார்த்தை ஆதி 3:13ம் வசனத்தில் தேவன் ஏவாளிடம் கேள்வி கேட்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு செயலின் விளைவாக ஏற்பட்ட ஒரு மோசமான காரியம் கண்டுபிடிக்கப்பட்டு, வீட்டுக்கு கொண்டுவரப்பட்டதை காட்டுகிறது.) இஸ்ரயேல் ஜனங்களிடம் எந்த தொடர்பையும் வைத்துகொள்ளாத இந்த கப்பலோட்டிகள், புறஜாதிகள் மற்றும் அந்நியர்கள் தன்னுடைய தேவனை எதிர்த்து அவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாத யோனாவை சந்தேகத்துடன் பார்த்தார்கள்.

எபிரெய தேவனுடைய வல்லமையின் மேல் நம்பிக்கை வைப்பதற்கு அங்கிருந்த கப்பலோட்டிகளுக்கு இந்த சம்பவம் ஒரு சிறந்த ஆதாரமாக இருந்தது. கர்மேல் பர்வதத்தில் செலுத்தப்பட்ட பலிகளை அங்கீகரிப்பதற்கு தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பின காட்சியும், பாகாலின் தீர்க்கதரிசிகளை எலியா கொன்றுபோட்ட காரியங்களும் அதே நூற்றண்டில் நடந்த சம்பவங்களாக இருந்தது. இவர்களுடைய வீடுகள் இருந்த சீதோன், தீரு பட்டணங்கள் - கர்மேல் பர்வதத்திற்கு அருகாமையில் இருந்தது. ஆகவே இஸ்ரயேலில் நடந்த இச்சம்பவங்கள் இவர்களுக்கு பரிச்சயமாக இருந்திருக்கவேண்டும். இப்போது அதே தேவனிடமிருந்து யோனா ஓடிவந்த காரியம் இவர்களின் பயத்திற்கு நியாயமான காரணமாக அமைந்தது.

இப்பொழுது என்ன செய்ய வேண்டும் ? அனைவரின் சிந்தையிலும் முதன்மையாக இருந்த கேள்வி இதுவே. யோனாவின் உண்மையான மனம்வருந்துதலுக்கு சாட்சியாக, கப்பலோட்டிகள், அவரின் ஆலோசனையை கட்டாயமாக கேட்கும் சூழ்நிலையில் இருந்தார்கள். யேகோவா தேவனுடைய தீர்க்கதரிசி தன்னுடைய செயலின் விளைவுக்கு ஏற்றவாறு சரியான ஆலோசனையை கொடுப்பார் என்று உறுதியோடு நம்பினார்கள். யோனாவுக்கு இந்தபிரச்சனை மிகத்தெளிவாக இருந்தது. இதைகுறித்து அவருக்கு எந்த அளவுக்கு மேலிருந்து ஆலோசனை கொடுக்கப்பட்டது என்பதை நாம்அறியோம். ஆனாலும் அவர்களின் ஜீவனை தப்புவிப்பதற்கு எந்த விதமான தயக்கமும் இன்றி தன்னை கொந்தளிக்கும் கடலில் எறியும்படி கட்டளையிட்டார்.

இந்த கொடூரமான முடிவை தவிர்ப்பதற்கு அவர்களால் முடிந்த வரைக்கும் முயற்சித்தார்கள். கப்பலை மீண்டுமாக கரைக்கு கொண்டுவரும்படி விருதாவாக தண்டுவலித்தார்கள். அவர்களின் அனைத்து முயற்சிகளும்

பயனற்றுபோனது. அவர்கள் தேவனை எதிர்த்து போராடினர்கள். ஆகவே ஒருவரும் வெற்றி பெறவில்லை. யோனா ஜீவனை இழக்கவேண்டும் இல்லையென்றால் மற்ற அனைவரின் உயிர்களும் பறிபோய்விடும் என்று அறிந்துகொண்டார்கள். எபிரெயரின் தேவன் அவர்களை தம்முடைய கிருபைக்குள் வைத்திருந்தார்.

கடலுக்குள் நடந்த உச்சக்கட்டமான சம்பவத்திற்குள் நாம் இப்போது வந்திருக்கிறோம். தேவபக்தி இல்லாதவர்கள் தேவனை விசுவாசித்து அவருடைய மகத்துவமான சர்வவல்லமையை உணர்ந்து, தங்களுடைய செயலுக்குரிய மன்னிப்புக்காக ஜெபித்தார்கள். *".. ஆ கர்த்தாவே, இந்த மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துப்போடாதேயும், குற்றமில்லாத இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்தாதேயும், தேவரீர் கர்த்தர், உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர்..."* (வசனம் -4)

நீண்ட கால வரலாற்றில், யோனாவின் சொந்த தேசத்தின் ஜனங்கள், தங்களுடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்வது பழக்கமாகவே இருந்தது. அந்தபடியே அந்த சோகமான காட்சி இப்போதும் நேரிட்டது. *"தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள் ?"* (அப் 7:52) என்று ஆலோசனை சங்கத்தாரின் முன்னிலையில் ஸ்தேவான் கேள்வி எழுப்பினார். ஆனால் அவர்களைவிட கொடூரமான, நாகரீகமற்ற புறஜாதிகள் இப்படிப்பட்ட பேராபத்திற்குள் தங்களை கொண்டுவந்ததிற்கான தன்னுடைய குற்றத்தை தானே ஒப்புகொண்டவர்மேல் கைகளைப்போட மறுத்தார்கள். தீர்க்கதரிசிகளை ஏற்றுகொண்ட ஜனங்களைக் காட்டிலும் அவர்கள் அந்த தீர்க்கதரிசன பணியை மதித்து கனப்படுத்தினார்கள்.

*"யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள், சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது."* (வசனம் 15) அந்த கப்பலை கவிழ்க்கும்படி கடலைகொந்தளிக்கச் செய்தபுயலை செயலாற்றிய அதே தெய்வீக குறுக்கீடு, திடீரென்று, அந்த கொந்தளிக்கும் சூறாவளிகாற்றை நிறுத்தியது. அந்த கப்பலில் இருந்த அனைவரும் பரலோகத்தின் தேவனை நம்பி, அவரே இவர்களை மீட்டுகொண்டார் என்பதை விசுவாசித்தார்கள். மேலும் அவர்கள் செய்தகாரியம் நியாயமானது என்றும் அறிந்துகொண்டார்கள். அவர்கள் சிந்தையில் கொண்டிருந்த பாதிப்பை அடுத்த வசனத்தில் வாசித்து அறியலாம். அவர்களை ஆழமானபக்தி ஆட்கொண்டதால், உடனடியாக அநேக வாக்குறுதிகளையும், பலிகளையும் செலுத்தத் துவங்கினார்கள்.

அந்த கப்பலில் மட்டும் அல்ல, மீண்டுமாக அவர்கள் கரைசேர்ந்தவுடனும் சில மிருகங்களை வெட்டி பலி செலுத்தியிருக்க வேண்டும். அநேக மாதங்கள் பயணிக்க வேண்டிய இந்த கப்பலில் பயணிகளுக்கு தேவைப்பட்ட

மாம்ச உணவுகளுக்காக அநேக ஆடுகளையும், மாடுகளையும் எடுத்து சென்றிருக்கவேண்டும். பதப்படுத்திய மாமிசம் உணவுகளும், குளிர்பெட்டிகளும் அன்றைய தினங்களில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே பலிசெலுத்துவதற்கும், உணவுக்கும் தேவைப்பட்ட மிருகங்களை அந்தகப்பலில் அவர்கள் வைத்திருக்கவேண்டும். புயலினால் மீண்டும் அடிப்பட்ட கப்பல் அநேககாரியங்ளை சிந்தித்து கொண்டேவந்த அனைவரையும் சுமந்துகொண்டு தட்டுத்தடுமாறி யோப்பா பட்டணத்தின் கரையை எட்டியது. வெற்றி அடைந்து புயலின் கடுமையான சீற்றத்தில் அனைவரும் தேவனை முகமுகமாய் கண்டார்கள். அதற்குபின் அவர்களின் வாழ்க்கை முன்இருந்ததுபோல இருந்திருக்க வாய்ப்பில்லை. அந்தகப்பலில் பயணித்த ஏதோ ஒரு இஸ்ரயேலன் சங்கீதகாரருக்கு ஆலோசனையாக இந்த காரியங்களை அறிவித்து ஊக்குவித்திருக்கவேண்டும். *"கப்பலேறி, கடல்யாத்திரைபண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள்... "* (சங் 107: 23)

## அதிகாரம் - 3

## கடலில் நடந்த ஒரு உண்மை சம்பவம்

ஆச்சரியத்தால் திடுக்கிடும் இந்தசம்பவம் வேதாகமத்தில் மூன்று சிறியவசன பகுதிகளில் அதாவது, கிட்டத்தட்ட ஐம்பது வார்த்தைகளுக்குள் அடக்கப்பட்டுள்ளது. *"யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார், அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி.... கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது."*

இப்படிப்பட்ட வியக்கத்தக்க சம்பவத்தை இவ்வளவு சுருக்கமாக எந்த ஒரு எழுத்தாளனும் எழுதி, திருப்தியடைந்திருக்க வாய்ப்பில்லை. இதன் வரலாற்று பூர்வமான ஆதாரங்கள், இந்தபுத்தகத்தின் முக்கியமான நோக்கம் அறிவிக்கப்படுவதை கட்டுப்படுத்தவில்லை என்ற அற்புதமான உண்மை குறிப்பிடப்பட்டிருக்கிறது. யோனாவை பொருத்தவரையில் அந்த மீனின் சம்பவம் ஒரு தனிப்பட்டகாரியமாக இருந்தது. அந்த அனுபவத்தின் மூலம் அவர் கற்றுகொண்ட முக்கியமான பாடத்தை யோனா 2 :2-9 வசனங்களில் மிகஅழகாக பதிவுசெய்திருக்கிறார். ஆனால் அவருடைய நோக்கத்திற்கு தேவைப்பட்ட உண்மையான அனுபவத்தை மட்டும் அவர் சம்மந்தப்படுத்தியிருக்கிறார்.

அந்நாட்களில் கேள்வி கேட்போரும், கேட்ட காரியங்களைக் குறித்து சந்தேகிக்கிறவர்களுக்கும் இந்தச் சம்பவம் நம்பத்தகுந்ததாக இருக்கவில்லை. ஒருமனுஷன் மீன்வயிற்றுக்குள் சென்று உயிருடன் வெளியே வந்த காரியம் நம்பக்கூடாததாக இருந்ததினால், அவைகளை உண்மையென்று வெளிப்படுத்த முயற்சித்தார்கள் என்று நம்பினார்கள். உண்மையென்னவெனில், இந்தபுத்தகத்தை தவறுஎன்று நிரூபிக்க இந்தசம்பவம் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. இந்த ஒருகாரியம் உண்மையில் நடந்ததென்று நம்புவதைக் காட்டிலும் எந்தவிதமான அடிப்படை உண்மைகளையும் கொண்டிராத ஒருகண்டிபிடிப்பு என்றுஎண்ணி இந்தசம்பவத்தை முற்றிலுமாக புறக்கணிக்கிறார்கள்.

யோனாவின் புத்தகம் ஒருஉண்மையான வரலாறுஎன்று ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள் முன்னதாக கொடுக்கப்பட்டுள்ளது. யோனாவுக்கு ஏற்பட்ட ஆச்சரியமான காரியங்கள் அனைத்தும் உண்மையென்று ஏற்றுகொள்ள அந்த ஆதாரங்கள் போதுமானது. ஆகவே கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்தை வளர்த்துகொள்ள இதற்கு மேல் கூடுதலான ஆதாரங்கள் தேவைஎன்று யோசிக்கவேண்டாம். ஆனாலும் காரியங்களை தீர்க்கமாக விசாரிப்பது நல்லது.

இப்படிப்பட்ட வாதங்களும், ஆதாரங்களும் அடிக்கடிவருவதுண்டு, இவைகள் நம்முடைய பாடத்தை மேலும் சுவாரசியமாக்கிவிடும். இக்காலத்தில் இந்தசம்பவத்தை எளிதில் நம்புவதற்கு மிகக்கடினமாக இருந்தபோதிலும் தேவன் அறிந்தே இந்ததனிப்பட்ட சாட்சியை நடந்தபடியே பதிவு செய்திருக்கிறார்.

இந்தசம்பவத்தை பொருத்தவரையில் ஒருமனுஷன் திமிங்கலத்தினால் விழுங்கப்பட்டதும், அதற்குபின் உயிரோடே வெளியே வந்ததையும் நவீனவரலாறு, தக்கஆதாரங்களைக் கொடுப்பதில்லை. ஆகவே இந்த இரண்டு காரியங்கள் ஏற்றுகொள்ளப்படுவதில்லை. (யோனாவின் புத்தகத்தில் எந்த விதமான திமிங்கலத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை. எபிரெய மொழியில் "ஒரு பெரிய மீன்" என்றே சொல்லப்பட்டுகிறது. ஆனால் "கீடோஸ்" என்ற கிரேக்க வார்த்தை புதியஏற்பாட்டில் நம்முடைய ஆண்டவர் இந்தசம்பவத்தை குறிப்பிட்டபோது பயன்படுத்தப்பட்டது) பழங்காலத்தில் மத்தியதரைக் கடலின் பகுதியில் திமிங்கலங்கள் அதிகமாகக் காணப்பட்டது. இன்று இவைகளை காண்பது அறிதாக இருந்தாலும் அவ்வப்பொழுது பார்க்கலாம். லண்டனில் 1957ம் வருடம் மேமாதம் 17ம் தேதி அன்று "நியூ குரோனிகில்ஸ்" என்ற பத்திரிகையில் சைப்பிரஸ் கடற்கரையில் ஒதுங்கிய ஒருதிமிங்கலத்தை பிரிட்டிஷ் இராணுவம் முகமூடிகளை அணிந்துகொண்டு அதை அகற்றினார்கள் என்றுசெய்தி வெளியிடப்பட்டது. பண்டைய

நூல்களில், யோப்பா பட்டணத்தில் திமிங்கலம் சம்மந்தப்பட்ட சிலஞாபகார்த்தத்திற்குரிய விநோதமான சம்பவங்கள் நடந்ததைப்பற்றி அநேகக்குறிப்புகள் உள்ளது.

1891ம் அண்டு, ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி அன்று பிரன்ச்சு நாட்டை சேர்ந்த "ஜர்னல் டிஸ் டிபேட்ஸ்" (பிரபல பிரன்ச்சு நாட்டுகுறிப்பேடு -1789ம் ஆண்டு நிறுவப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் உள்ள செய்திகள் வெளிவரும் பத்திரிகை) ஒரு விநோதமான சம்பவத்தை ஆராய்ந்து அதன் முடிவுகளை வெளியிட்டிருந்தது. எம். டி பார்வில்லி, தன்னுடைய சகவிஞ்ஞானிகளோடு யோனாவின் சம்பவம் ஒருஉண்மை சரித்திரமாக இருக்கவேண்டும் என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி ஆராய்ந்து நிரூபித்து அதைவெளியிட்டார். மீண்டுமாக இந்த காரியங்கள் நிரூபிக்கப்பட்டு 1896ம் வருடம், ஏப்ரல் மாதம் 4ம் தேதி அன்று "லிட்டெரரி டைஜீஸ்ட் " என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளிவந்தது.

1891ல் "ஸ்டார் ஆப் ஈஸ்ட்" என்ற பத்திரிகையில், மற்றொரு சம்பவம் வெளியிடப்பட்டிருந்தது. லிவர்பூல் என்ற இடத்தில் சென்றுகொண்டிருந்த ஒருகப்பலை திமிங்கலங்கள் சூரையாடியது. அந்தகப்பலில் உள்ள ஆட்களைமீட்க இரண்டு படகுகள் அனுப்பப்பட்டது. முதல்படகில், திமிங்கிலத்தை பிடிப்பதற்காக, கயற்றில் கட்டிய ஒருவிதமான ஈட்டியை எறிந்தார்கள், ஆனால், அது அந்தபடகை இழுத்துகொண்டு ஐந்து மைல் தூரம்வரை சென்றது. அதற்குபின் அது மற்ற படகை நோக்கி வந்தது. அதிலிருந்தும் ஒரு ஈட்டி எய்யப்பட்டது. அந்த குத்தை வாங்கினபின்னும் சுமார் மூன்று மைல் சென்று, பின்பு, மரணஅவஸ்தை படத்துவங்கியது. இதில் ஒருபடகு, திமிங்கிலத்தினால் தேசப்படுத்தப்பட்டு, அதில் உள்ளவர்கள் தண்ணீரில் எறியப்பட்டார்கள். மற்றபடகில் உள்ளவர்கள் தண்ணீரில் விழுந்தவர்களைக் காப்பாற்றினார்கள்.

தப்பிப்பிழைத்தவர்கள் கரைக்கு திரும்பினார்கள். செத்துபோன திமிங்கிலத்தையும் கரையில் இழுத்துவந்து அதைத்துண்டுகளாக வெட்டிகொண்டிருந்தார்கள். காலைமுதல் மறுநாள் காலைவரை இப்பணியில் அனைவரும் ஈடுப்பட்டிருந்தார்கள். அடுத்த நாள் அவர்கள் வயிற்று பகுதியை வெட்டும்போது, ஏதோ ஓர் உயிர் இருப்பதுபோல தெரிந்தது. அதை முழுவதுமாக வெட்டி பார்த்தப்போது, முப்பத்தைந்து வயதுள்ள ஒரு கப்பலோட்டி சுயநினைவற்று கிடந்தார். அவர் சீக்கரத்தில் குணமடைந்தார். மூன்று வாரங்களுக்குப்பின் அவருடைய வேலைக்கு அவர் தொடர்ந்து சென்றார்.

அதற்குபின் இந்த கதை அநேக பத்திரிகைகளில் அச்சடிக்கப்பட்டது. அதேபோல 1758ம் வருடம், இருபது அடி அளவுள்ள ஒரு திமிங்கலம் ஒருவரை விழுங்கியது. ஆனால் உடனடியாக அவரை உயிரோடு திரும்ப கக்கிவிட்டது. இதுபோல பலசம்பவங்கள் பலஇடங்களில் நடந்துள்ளது.

"மீனின் வயிறு" என்று சொல்லப்படும் காரியம் பொதுவாக அது மீனின் உட்புறத்தையே குறிக்கும் என்று எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் ஒருவேளை யோனா மீனின் வயிற்றில் மூன்று நாள் இருந்திருந்தால் அவர் நிச்சயமாக மரித்திருக்கவேண்டும். ஆகவே உயிர் நூலைச் சார்ந்த கண்ணோட்டத்தில் நாம் பார்க்கும் போது, யோனா வயிற்றுக்குள் செல்ல வாய்ப்பில்லை, ஆனால் மீனினால் விழுங்கப்பட்ட யோனா, அதனுடைய விஸ்தாரமான வாயில் இருந்திருக்க வேண்டும். இந்த உத்தேசத்தை 1924ம் வருடம் "விக்ட்டோரியா இன்ஸ்டிட்டுட் ஆப் லண்டன்" முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இப்படிப்பட்ட திமிங்கலங்கள் மத்தியதரைக்கடலில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவை நூறுஅடி நீளமாக இருந்தன. இவைகளின் வாய் பத்திலிருந்து இருபதுஅடி உயரமும், எட்டிலிருந்து பன்னிரெண்டு அடி அகலமுமாக இருந்தது. நெகிழக்கூடிய நீண்ட எலும்புகளால் பின்னப்பட்ட ஒருவலை அல்லது இராட்சத வடிக்கட்டியைப்போல அதன்வாயின் முன்பகுதியில் காணப்படுகிறது. மிதக்கக்கூடிய சிறிய மீன்களையும், அதனுடைய ஆகாரத்தையும், வாயை திறந்து அவைகளை உட்கொள்ளும். அந்தவலையின் வழி செல்லாத உணவுகளை அதுமீண்டும் வெளியேற்றிவிடும்.

யோனா கப்பலிலிருந்து வெளியே எறியப்பட்டபோது மீனின் இந்த இராட்சத வலையில் சிக்கியிருக்கவேண்டும். இந்த மீன் முழுமையாக வளர்ச்சியடைந்திருந்தால், அது கிட்டத்தட்ட நூறுஅடி நீளமாக இருந்திருக்கும். யோனாவை எந்த கஷ்டமுமின்றி விழுங்கியிருக்கும். ஒருவேளை அது வளர்ச்சியடையாத மீனாக இருந்திருந்தால் யோனா முன்னும், பின்னும் போகமுடியாமல் சிரமப்பட்டிருக்கவேண்டும். ஆகவே யோனா கடல்தண்ணீரின் மத்தியிலும், அதிகமான பிராணவாயுவுடன் மூன்று நாள் இருந்திருக்கவேண்டும். அந்த கடலின் வெப்பமும் மிதமாக இருப்பதினால் யோனாவுக்கு எந்த பிரச்சனைகளும் வந்திருக்காது. குறுகிய கால இடைவெளியில், அந்த திமிங்கலம் தண்ணீருக்குள் பாய்ந்து, குறைந்த பட்சம் பத்து நிமிடங்களாவது தண்ணீருக்குள் நீந்தும். மேலும், திமிங்கலம் கடலில் இருந்தாலும் அது உண்மையான மீன்வகையை சேர்ந்ததல்ல. அதுஒரு பாலூட்டி. அதுதன்னுடைய நுரையீரலினால் சுவாசிக்கும் ஒருவிலங்கு. ஆகவே தனக்குள் பிராணவாயு இருக்கும் மட்டும் அது தண்ணீருக்குள் இருக்கும், அது தீர்ந்தவுடன் தண்ணீரின் மேற்பரப்புக்கு வந்துவிடும். அந்தமீனின் வாயில் காற்று இருந்தவரையில்

யோனாவுக்கு எந்தவிதமான மூச்சு திணரலும் ஏற்படவாய்ப்பில்லை. ஆனால் மீன் தண்ணீருக்குள் பாயும்போது அந்த மீனின் வாய்க்குள் இருட்டாகவும், தண்ணீர் அற்ற நிலையில் வெப்பமாகவும் இருக்கும். ஒரு மனுஷன் ஒருமணி நேரம் சுவாசிக்க எழுபது கியூபிக் சதுரஅடி காற்று தேவைப்படுகிறது. ஆனால் ஒரு சிறிய திமிங்கலத்தின் வாயின் கொள்ளளவே குறைந்தபட்சம் 650 சதுரஅடிகள் இருந்ததால், நிச்சயமாக யோனா பயணம் செய்த மீனின்வாய் பெரியதாகவே இருந்திருக்கும். ஆகவே அவருக்கு எந்தவிதமான மூச்சுத் திணரல்களும் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. அந்த மீன் தண்ணீரின் மேற்பரப்பில் நீந்தி செல்லும்போது, யோனா கடலில் எந்தவிதமான மாறுதலுமின்றி குதூகலித்திருப்பார். அவர் பயணித்த மூன்று நாட்களை நாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, அந்த மீன் ஒருமணி நேரத்திற்கு நான்கு மைல் தூரம் பயணித்திருக்கவேண்டும். ஆகவே தண்ணீர் ஓட்டமும் யோனாவை பாதிப்பதற்கு வழியில்லை. அது மெதுவாக உள்ளே சென்று திரும்ப வெளியே வந்திருக்கும். இதைக்குறித்து யோனா துல்லியமாக தேவனிடம் முறையிட்டார் -*" சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர், நீரோட்டம் என்னைச் சூழ்ந்துகொண்டது. உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல் புரண்டது. "*(யோனா 2:3)

அந்த மீன் கடலின் ஆழ்பகுதிக்குள் பாய்ந்து செல்லுகையில், யோனாவுக்கு மூச்சுத்திணரல் ஏற்படாமலிருந்தாலும், முற்றிலுமான இருட்டும், வெப்பமும் அவரைத்தாக்கியது. அந்த மீன் மேலும், கீழும் செல்லக்கூடிய விதமானது அவரை அலைக்கழித்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்பட்ட அந்த பயங்கரமான அனுபவத்தில் அவர் உயிர்தப்பிப் பிழைப்பேன் என்று நினைத்துக்கூட பார்த்திருக்கமாட்டார். தேவனுடைய வேலையை துணிந்து நிராகரித்துவிட்டு, பிடிவாதமாக அதை செய்யக்கூடாது என்ற மனநிலையில் இருந்தபோதும், தேவனுடைய தெய்வீக வல்லமையில் நம்பிக்கை வைத்தார். இங்கு தான் அவருடைய மிகச்சிறந்த விசுவாசம் வெளிப்படுத்தப்படுகிறது. இப்பொழுது அவர் மிகஆபத்தான நிலையில், உண்மையான மனவருந்துதலோடு தேவனிடத்தில் திரும்பினார். "*நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன், ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன். தண்ணீர்கள் பிராணபரியந்தம் என்னை நெருக்கினது, ஆழி என்னைச் சூழ்ந்தது, கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது. பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன், பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைக்கிறதாயிருந்தது, ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர்."*(யோனா 2-4-6)

இந்த வசனத்திலுள்ள கடைசிவரி, கடந்தகாலத்தை குறிப்பிடுவதைக்குறித்து நாம் தவறான முடிவுக்கு வந்துவிட வேண்டாம். யோனா மீனுக்குள் இருக்கும் போதுதான் இந்த ஜெபத்தை தேவனிடம் ஏறெடுத்தாரேதவிர, அவர் தப்பினபின் அல்ல. இனி நடக்கக்கூடிய காரியங்களை நடந்ததுபோல பேசுவது எபிரெய இலக்கியத்தில் இயல்பான ஒருபழக்கமாகும். அதாவது, அது நிச்சயமாக நடக்கும் என்ற நம்பிக்கையோடு பேசப்படும் பேச்சுகளாகும். இதுவரையில் தேவனுடைய தெய்வீக வல்லமையினால் மிக அற்புதமாக அவரை நடத்தி வந்ததை உணர்ந்த யோனா, தேவன் அவரை அழைத்த நோக்கத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, யோனாவை அவர் என்றுமே கைவிடமாட்டார் என்று முழுமையாக தன்னுடைய இருதயத்தில் நிச்சயத்திருந்தார். அவர் மனந்திரும்புவதற்கான சூழ்நிலையையும், நேரத்தையும் காலத்தையும், வாய்ப்புகளையும் கொடுத்தார். ஆகவே அவர் வந்த பாதையில் மீண்டும் செல்ல முழுமையாக முயற்சித்தார். தேவனுடைய குறுக்கீடில்லாமல், அவர் மீண்டும் திரும்பி வராதபடிக்கு தர்ஷீசுக்கு பயணித்தாலும், தேவனுடைய கரம் அவரை திருப்பி கொண்டுவந்தது.

நிச்சயமாக யோனாவின் மனமாறுதல் மீனுக்குள் நடந்ததென்று நிரூபிக்கப்பட்டது. அந்த மீன் மலைகளின் அடிவாரத்தில் பசுமையான பாசிகள் மத்தியில் பயணிக்கும்போது, யோனா நித்தியமாக அதன்மத்தியில் சிறைவைக்கப்படுவார் என்று பயந்து, அண்டசராசரங்களின் மேல் வீற்றிருந்து, தன்னுடைய சிருஷ்டிப்பாகிய ஒவ்வொரு ஜீவராசிகளையும் பார்த்துகொண்டிருக்கும், பரலோகபிதாவினிடத்தில் ஜெபங்களை ஏறெடுத்தார். நிச்சயமாக, தேவன் அவருடைய ஜெபங்களைக்கேட்டார். தனிச்சையாக நடக்கும் அறியாத குழந்தையின் உபத்திரவங்கள் இனி நீடித்திராதபடிக்கு, யோனாவை தப்புவிக்க தேவனுடைய கிருபை கட்டளைக்கொடுத்தது.

தேவன் மேல் வைத்த விசுவாசம் யோனாவுக்கு ஆதரவளித்தாலும், எழுபத்திரண்டு மணி நேரம் அவர் பட்ட கடினமான சோதனையை பொறுமையோடு தாங்கிக் கொண்டிருப்பது மிகக்கொடூரமாக இருந்திருக்கவேண்டும். இந்த ஒருசிறையில் இறுதியில் அவர் சுயநினைவை இழந்திருக்கவேண்டும். இதைக்குறித்து, காரியங்கள் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. *"என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன், என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது."* (வசனம் -7)

அவர் நினைவற்ற நிலையில் கடைசியாக சிந்தித்தது, அவரை தப்புவிக்க ஒரேவழி அவருடைய ஜெபங்களாகத்தான் இருந்திருக்கவேண்டும். அந்த இருளில் தன்னுடைய நம்பிக்கையை மிகசிரமப்பட்டு கூட்டிசேர்த்து, விழுந்தப்பின் தப்பிக்க வழிதேடலாம் என்று நினைத்திருப்பார்.

நம்முடைய ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மிக துல்லியமான படம் இங்கு சித்தரிக்கப்பட்டிருக்கிறது. யோனா பெற்ற இதே அனுபவங்களை இயேசு மரண இருளுக்குள் பிரவேசித்து, அந்த மரணம் அவர்மேல் முழுமையாக நிழலிட்டபோது, "பிதாவே, என்னுடைய ஆவியை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சொல்லி தன் தலையைச் சாய்த்தபோது - அவரும் பெற்றார். அவர் உயிர்த்தெழும் வரைக்கும், அந்த நிலையில் இருந்ததுபோலவே, யோனா மீனிலிருந்து வெளிவரும்வரை அந்நிலையில் ( சுயநினைவற்று) இருந்தார்.

யோனாவுக்கு அழிவுக்குரிய கருவி, இரட்சிப்பின் வாகனமாக மாறியது. தெய்வீக அழைப்பை புறக்கணித்து, தன்னுடைய சொந்த விருப்பங்களை வாழ்க்கையில் நிறைவேற்ற திட்டமிட்டபடியினால், தன்னுடைய எல்லாவற்றிலும் நஷ்டம் அடைந்தார். ஆனால் தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய கிருபை செயல்பட்டதினால் மரணத்தை மட்டும் அவர் சுதந்தரிக்கவில்லை. அவருடைய மனந்திரும்புதலே அவருடைய ஜீவன் தப்பிக்கக் காரணமானது. ஆகவே அவருடைய கல்லறை ஒரு புதிய உலகத்திற்கு வழிவகுத்தது. அதில் அவர் தேவனுடைய வார்த்தைகளுக்கு உறுதியாகக் கீழ்ப்படிவதே அவருடைய மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. *"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன், நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன், இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்"*(9)

இப்படியாக, நேரம் வந்தது, தேவனுடைய வார்த்தைகள் நேர்த்தியாகவும், எளிமையாகவும் பதிவு செய்திருப்பதுபோல, தேவனுடைய சர்வசிருஷ்டிகளும் அவருடைய அநந்த ஞானத்தில், முழு கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை ஸ்திரீகளும், புருஷர்களும், குழந்தைகளும் வெளிப்படுத்தும் படியாக - "கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவை கரையிலே கக்கிவிட்டது."

## அதிகாரம் - 4

## எதிர்பாராத சாட்சியங்கள்

கிரேக்கம் மற்றும் ரோமர்களின் பழங்காலத்து எழுத்தாளர்கள், வேதவசனங்களின் சத்தியங்களை தங்களுடைய எழுத்துக்களுக்கு சாட்சியாக எப்போதும் எடுத்துக் கொள்ளுவதில்லை. ஆனால் அவர்களின் எழுத்துக்களைபார்க்கும்போது, யோனாவின் சம்பவத்தை நியாயப்படுத்தும்படி சில மறைமுகமான குறிப்புகளை எழுதியுள்ளார்கள். அதில் யூதேயாவில் உள்ள யோப்பா நகரத்தில் பழங்காலத்து வரலாற்றில், திமிங்கலம் சம்மந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியின் நினைவாக ஏதோ ஒரு ஞாபகார்த்தம் வைத்திருப்பதாகத் தெரிகிறது.

பிலினி என்ற ஒரு இயற்கை வரலாறு ஆசிரியர் தன்னுடைய தொடர்சாட்சிகளை கொடுத்திருக்கிறார். அப். பவுல் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து, கிபி 79ல் ஒரு நிலநடுக்கத்தில் மரித்துபோன ஒருஉரோம ஆசிரியரும் இதைகுறித்து எழுதியிருக்கிறார்கள். பிலினி அநேக தொகுப்புகளை எழுதினவர். தன்னுடைய ஒன்பதாவது தொகுப்பில் அநேககாரியங்களை எழுதியிருந்தார். அதில் யூதேயாவில் உள்ள யோப்பா பட்டணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு இராட்சத எலும்புகூட்டைபற்றி எழுதியிருக்கிறார். அந்த திமிங்கலம் சுமார் 40 அடி நீளமும், 10-15 அடி உயரமுமாக இருந்தது. யோப்பா கோவிலில் பல நூற்றாண்டுகளாக இந்த எலும்புகூடு பாதுகாக்கப்பட்டு வந்தது. ஒரு வேளை ஏதோ ஒரு முக்கியமான சம்பவத்தை ஞாபகப்படுத்துவதற்காக இது பாதுகாக்கப்பட்டிருக்கவேண்டும். அன்டிரோமேடா மற்றும் பெர்சியாஸ் என்ற கிரேக்க கதைகளிலும் இந்த இராட்சத எலும்புகூட்டைபற்றி சொல்லப்பட்டதாக பிலினி எழுதுகிறார்.

மற்ற படித்த ரோம எழுத்தாளர்களைப்போல, பிலினியும் இந்த கதைகளை கண்ணோக்கினார். இவர்கள் ஏதோ கிடைக்கப்பெற்ற சிலஅடிப்படையான உண்மைகளை வைத்து எழுதினார்கள். ஆனால் இந்த எலும்புகூட்டைபற்றி சொல்லப்பட்டவைகள் ஒரு வித்தியாசமான காரியமாக இருக்கிறது. இவை எல்லாவற்றையும் நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, கிபி 58ம் வருடம் வரைக்கும் யோனாவைப் பற்றி நியாயமான அநேக உண்மைகள் நிரூபிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். மேலும் இதுபோன்ற கதைகளை வரலாற்று ஆசிரியர்களின் எழுத்துக்களில் படித்தறியலாம்.

அந்த திமிங்கலத்தோடு யோனாவுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் - யோனா என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (கிபி 810-கிபி 850) அந்த திமிங்கலம் வெட்டாந்தரையில் யோனாவை கக்கியிருந்தால், அந்த மீன் கடலின் எல்லைக்கு வந்திருக்கவேண்டும். அப்போது யோனா தண்ணீரில் நீந்தாமல், எழுந்து வந்திருப்பார். ஏனெனில், தேவன் யோனாவை யோப்பாவின் கரையில் யோனாவை கொண்டு வந்து சேர்க்கவேண்டியதாக இருந்தது. இதே இடத்திலிருந்த யோனா சில நாட்களுக்குமுன் தன்னுடைய பயணத்தை துவங்கவேண்டியதாக இருந்தது. தேவனோடு பயனற்ற ஒரு போராட்டத்தை போரடுவதற்கு இந்த தீர்க்கதரிசியின் மனதில் எப்படிப்பட்ட பலம் செயல்பட்டிருக்கவேண்டும் ? ஒரு வித்தியாசமான கோணத்தில் இதைபார்க்கும்போது, தேவன் இதுவரையில் நடந்த காரியங்களை புறக்கணித்து அல்லது மறந்து விட்டார் என்பதை நிச்சயமாக யோனா உணர்ந்திருப்பார் அல்லவா ? ஒரு புதிய துவக்கத்தை துவங்குவதற்கு யோனா தன்னுடைய பயணத்தை துவங்கின இடத்திற்கே கொண்டுவரப்பட்டார்.

இந்த ஒரு கணிப்பு உண்மையாக இருக்கும் பட்சத்தில், யோனா பயணித்த கப்பல் யோனாவுக்குமுன் கரை சேர்ந்திருக்கவேண்டும். அந்த கப்பலைப் பற்றி வேதாகமத்தில் எந்த குறிப்பும் கொடுக்கப்படவில்லை. ஆனால் தர்ஷீசுக்கு எடுத்து செல்லப்பட்ட அனைத்து சரக்குகளும் கடலில் எறியப்பட்டதால் மாலுமிகள் நிச்சயமாக கரைக்கு வந்திருக்கவேண்டும் (யோனா 1:5) மேலும் அந்த கப்பலின் பாய்களும், அதன் பாய்மரங்களும் கிழிந்துபோனபடியால், துடுப்பு வலிக்கும் கப்பலோட்டிகளை மட்டுமே நம்பி அந்த கப்பலை தர்ஷீசுக்கு பயணிக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இந்த விதிமுறைகளின் அடிப்படையில் ஒரு மணி நேரத்திற்கு ஐந்து மைல்கள் மட்டுமே அவர்கள் பயணிக்கமுடிந்திருக்கும். கரைக்கு வந்து சேர்ந்த பயணிகளும், கப்பலோட்டிகளும், அதன் தலைவரும், நடந்த சம்பவங்களின் விபரங்களை அனைவருக்கும் அறிவித்திருப்பார்கள். தேவனுடைய கோபம் எவ்வாறாக கப்பலை அலைக்கழித்தது என்றும், யோனாவை கடலில் எறிந்த விதத்தையும் அவர்கள் ஆச்சரியத்தோடு அறிவித்திருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, எபிரெயர்களின் தேவனாகிய "யேகோவா" சர்வல்லவர் என்பதை தெளிவாக அங்கிருந்தவர்களுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கும்.

புதிதாக நடந்த அற்புதம் அந்த பட்டணத்தில் ஒவ்வொரு இடத்திலும் பேசப்பட்டிருக்கும். அதே நேரத்தில் ஒரு பெரிய திமிங்கலம் கரையை நோக்கி வந்தபின் திமிரிக் கொண்டு, கஷ்டப்பட்டு வாலை அடித்து தண்ணீரைச் சுழற்றி தெளித்திருக்கும். இராட்சத உருவத்திலிருந்த அந்த மீனை வேடிக்கைப் பார்க்க நிச்சயமாக அநேகர் அதைச் சுற்றி கூடியிருக்க வேண்டும். அதன் பெரிதான வாலை அடித்துகொண்டு, கடலின் அலைகள் மத்தியில் புரண்டுகொண்டிருந்திருக்கும் அந்த மீனை அனைவரும் ஆச்சரியத்தோடு பார்த்திருப்பார்கள். ஆழமில்லாத அந்தத் தண்ணீரிலிருந்து எழும்பி கரைக்கு வந்திருக்கவேண்டும்.

இந்த நேரத்தில் ஒரு மிகப் பெரிய ஜனக்கூட்டம் கூடியிருக்க வேண்டும். ஏனெனில், அது கரையை நோக்கி வருவதற்கான போராட்டங்களை மேற்கொள்ள சில மணி நேரங்கள் செலவழித்திருக்கவேண்டும். அங்கு இருந்த சிலர் கடலிலிருந்து வந்த பரிசாக எண்ணி, அதை இலாபகரமாக விற்பதற்கு எண்ணினார்கள். யோனாவின் கப்பலில் பிரயாணம் பண்ணின கப்பலோட்டிகளோ, அல்லது பிரயாணிகளோ அங்கு கூடியிருந்தவர்களுக்குள் இருந்தார்களோ, இல்லையோ என்று தெரியவில்லை. ஒருவேளை இருந்திருந்தால், அடுத்து என்ன நடக்கபோகிறது என்று மிக ஆவலோடு எதிர்பார்த்திருக்கவேண்டும்.

அந்த மீனின் வாய் மெதுவாக திறந்தது. அதன் வாயிலிருந்தவைகளை கரையில் கக்கியது. உருவமற்ற, ஒழுங்கீனமான ஒரு உருவமாக யோனா கரையில் விழுந்தார். ஒருவேளை அவர் முதலில் சரியாக அமர்ந்து அதற்குபின் கைகளை ஊன்றி எழுந்திருக்கவேண்டும். அதை கண்டவர்கள் பயந்த ஓடியிருப்பார்கள். அதற்குபின் அவர் புத்தி தெளிவுள்ளவராக இருக்கிறாரா என்றும், சரியான மனநிலையிலிருந்தாரா என்றும் பார்க்கும்படி எச்சரிப்போடு அவரை நெருங்கியிருப்பார்கள்.

ஒருவேளை அவர்கள் யோனாவை வணங்கியும் இருக்கலாம். ஏனெனில் இத்தனை நாள் மீனின் வயிற்றிலிருந்து உயிருடன் வெளிவந்தவரை ஒரு மனிதனுக்கு மேலாக மதித்திருப்பார்கள். நிச்சயமாக இவரை உயிருடன் கொண்டு வந்த மீனையும் வணங்கியிருப்பார்கள். பல நூற்றாண்டுகளுக்கு யோப்பா பட்டணம் பெலிஸ்தியர்களின் துறைமுகமாக விளங்கியது. தாகோன், பெலிஸ்தியர்களின் ஒரு கடல் தெய்வமாக இருந்தது. அந்த தெய்வம் பாதிமனிதனும், பாதிமீனுமாக இருந்தது. 1சாமு 5:1-7. இந்நேரத்திற்குள் யோனா பயணித்த கப்பலின் மாலுமிகள் இதை கேள்விப்பட்டு அந்த இடத்திற்கு விரைந்திருக்கவேண்டும். அதன் முடிவு வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்திருக்கவேண்டும். தாகோன் இந்த பிரச்சனையில் தானே முன்வந்து, அந்த மனிதனை உயிருடன் காப்பதற்கு தன்னுடைய தூதனை அனுப்பி யோப்பா பட்டணத்திற்கு யோனாவை அனுப்பினார் என்று எண்ணினார்கள். ஒருவேளை அன்று இரவு யோப்பா பட்டணத்தில் யேகோவாதேவன் மற்றும் தாகோனைக் குறித்து அநேககோணத்தில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு மிகஆர்வத்துடன் பக்தியும், விசுவாசமுமுள்ள அநேக பிரகடணங்கள் அறிவிக்கப்பட்டு அவர்களுக்குள் ஒருஆன்மீக மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும்.

அதற்குபின் மாண்டுபோன அந்த திமிங்கலத்தை விற்பதற்கான முயற்சிகள் கைவிடப்பட்டிருக்கவேண்டும். அதை ஒரு தெய்வீக தூதனாகவும், அதன் சடலத்தை புனிதமாகவும் மதித்து காத்துகொண்டார்கள். யோகோவா தேவன் மற்றும் தாகோன் ஒரு அற்ப காரியமாக அவர்கள் நினைத்திருந்தாலும், இந்தசம்பவத்திற்குபின் அவர்கள் அதிகமாக கனப்படுத்தினார்கள்.

கடற்கரையில் மரித்துப்போன அந்த திமிங்கலம், வெளிப்படையான ஒரு உண்மை சாட்சியாக மீந்தது. மத்தியதரைக்கடலில் எந்தவிதமான ஏற்றதாழ்வு இல்லாத கடல்அலைகள் வீச, அதிகமான சூரிய வெப்பத்தில் கிட்டத்தட்ட 80 டன் எடையுள்ள அந்தசடலம் கிடந்தது. அதிர்ஷ்டவசமாக மத்திய கிழக்குப் பகுதிகளில் காணப்படும்

கழுகுகள் (புதிய ஏற்பாட்டின் கழுகுகள்) மோப்பம் பிடித்து வந்திருக்கவேண்டும். கானானில் உள்ள அனைத்து கழுகுகளும் யோப்பாவை வட்டமடித்து கடற்கரையைப் பார்வையிட்டிருக்கும்.

சுத்தம் செய்யப்பட்ட மீனின் எலும்புகூடுமட்டுமே மீந்தது. அந்த எலும்புக்கூடு அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டது. இந்த ஒரு அற்புதமான சம்பவத்தை நிரந்தரமான ஞாபகார்த்தமாக தாகோன் கோவிலில், இந்த எலும்புகூடு பாதுகாக்கப்பட்டது. இது ஒரு வெளிப்படையான சாட்சியாக இருந்தது. எலும்புகள் என்றுமே அழியாதது. மேலும் பூர்வ காலத்து மனிதர்கள் பொருட்களை பதப்படுத்துவதில் மிகவும் திறமைவாய்ந்தவர்களாக இருந்தார்கள். ஆகவே நிச்சயமாக இந்த எலும்புகூட்டை பதப்படுத்த அவர்கள் எந்த கஷ்டங்களும் அனுபவித்திருக்க மாட்டார்கள்.

இவைகள் அனைத்தும் யோனாவின் சரித்திரத்தை பொருத்தவரையில் உண்மையாக இருக்கும் பட்சத்தில், எழுநூறு வருடங்களுக்குபின், மார்க்கஸ் ஸ்காயுரஸ் உரோமாபுரியில் ஏற்பாடு செய்திருந்த மிகப்பெரிய பொருள் கண்காட்சிக்கு யோப்பாவின் கோவிலிலிருந்த திமிங்கிலத்தின் எலும்புகூட்டை கப்பலின் மூலம் எடுத்துச் சென்றதை விவரிக்கும். இதற்கு இடையிலுள்ள காலகட்டங்களில் உண்மையான கதைகளும் அதை சம்மந்தப்பட்டிருந்த புனிதமான காரியங்களும் மறக்கப்பட்டு வேறு விளக்கங்கள் கூறப்பட்டது. ஆகவே முந்தைய உண்மைகள் அனைத்தும் புதைந்திருக்கவேண்டும். ஆயினும், ஏதோ ஒருகதை விருவிருப்பாக பரவியிருக்க வேண்டும். விருப்பப்பட்ட அனைவரும் அதை ஆவலோடு காண வந்திருப்பார்கள். இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பின் கிரேக்கர்கள் அதை அதிகமாக பார்வையிட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு நேரத்திலும் இந்த கதைகள் மீண்டும் மீண்டுமாக அறிவிக்கப்பட்டு, கொண்டே இருந்திருக்கும். இப்படியாக, கிரேக்க பாடகர்களாலும், எழுத்தாளர்களாலும் இவைகள் பாடப்பட்டு, எழுதப்பட்டிருக்கும். யோப்பா மற்றும் அங்கு வந்த அற்புதமான அந்த இராட்சத திமிங்கலத்தைப் பற்றிய விபரங்களும் என்றும் அழியாதபடிக்கு கிரேக்க பழங்காலத்து கதைகளில் நிலைநிறுத்தியது போல, எபிரெயர்களும் இவைகளை பற்றிய உண்மைகளை சத்தியத்தின் உச்சக்கட்ட அளவில் உயர்த்தி பாதுகாத்தது. இந்த உண்மையின்அடிப்படையில் கதைகள் வளர துவங்கியது.

இப்படியாக, யோனா சுத்திகரிக்கப்பட்ட மனநிலையில், தேவனுடைய நோக்கத்தை மட்டுமே செய்யவேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புடன் தேவனுடைய அடுத்த கட்டளை வரும்வரைக்கும் அவருடைய ஊருக்கு திரும்பியிருக்கவேண்டும்.

## அதிகாரம் - 5

"இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர் - நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார். யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான், நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது."

இந்தமுறை யோனா தாமதிக்கவே இல்லை. பாடங்கள் நன்கு கற்பிக்கப்பட்டது. அவருடைய பயணத்திற்கு தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு தன்னுடைய வீட்டைவிட்டு புறப்பட்டார்.

அவர் எவ்வாறாக பயணித்தார் ? அவர் நீண்ட பயணம் செல்லவேண்டியதாக இருந்தது. சுமார் 900மைல்கள் பாலைவனங்களைக் கடக்கும் வணிகர் கூட்டத்தோடு, பாதுகாப்பாக சென்றிருக்கவேண்டும். தெரிந்த வரைக்கும் எகிப்திலிருந்து ஆசியாவுக்கு சென்றபாதை காத்தேபேருக்கு அருகாமையிலிருந்தது. ஆகவே யோனா தன்னுடைய பயணத்தைத் துவக்க எந்தவிதமான சிரமமும் பட்டிருக்கமாட்டார். அவர் காத்தேப்பேர்மலை சருக்கிலிருந்து வந்த ஏதோ ஒரு வணிகர் கூட்டத்திற்காகக் காத்திருந்து அவர்களோடு சென்றிருக்கவேண்டும்.

அவர் நீண்ட நேரம் காத்திருந்திருக்கவும் மாட்டார். கடல்வழியாக வணிகம் செய்வதுபோல, நிலத்தின் வழியாக வியாபாரம் செய்வது சற்று கடினமாகவே இருந்தது. அவர் மலையை விட்டு கீழே இறங்கும்போது, தூரத்தில் அவருடைய வலது பக்கமாக புகை மண்டலத்தைக் கண்டிருக்கவேண்டும். அவர் யோப்பாவுக்குச் சென்றபோது, எகிப்துக்கு செல்லும் இதே திசையை நோக்கி பயணித்து, ஓர் இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் ஏசாயா தீர்க்கதிரிசி சொல்லுவதற்கு ஏதுவாக, அவருடைய அனுபவத்தை நிரூபித்தார் - "சகாயமடையும்படி இஸ்ரயேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப்போய்... அவர்களை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 31-1) இப்பொழுது அவர் அந்த திசைக்கு எதிராக வடக்கு திசையை நோக்கி பயணித்தார்.

தேவன் வடக்கு திசைகளில் வாசம் செய்கிறவராக இருக்கிறார். எகிப்திலிருந்து வரும் வியாபாரிகளுக்காக அங்கு காத்திருக்கும் நேரத்தில் இவைகளை அவர் சிந்தித்துக் கொண்டிருந்திருப்பார்.

இந்த முறை அவர் எந்த விதமான கூலிக்கொடுக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. அவர் ஜனங்கள், மிருகங்கள், வண்டிகள், சரக்கு வாகனங்களோடு சென்றிருப்பார். எகிப்தியர்கள், பாபிலோனிய வியாபாரிகள் இவர்களையும், இவர்களின் பொருட்களையும் பாதுகாப்பதற்காக வந்த ஆயுதம் தரித்த அரபு தேசத்து பலவான்கள்,

அவர்களோடு இவரும் கலந்துவிட்டார். ஏனெனில் அக்காலத்தில் வழிப்பறி கொள்ளைக்காரர்கள் அதிகமாக இருந்தார்கள்.

கலிலேயா கடற்கரைக்கு கீழும், தமஸ்குவுக்கும் இடையில் ஒரு நிறுத்தம் இருந்தது. அங்கு சரக்குகளை ஏற்றி இறக்குவார்கள். சில வியாபாரிகள் அதற்குமேல் பயணிப்பார்கள், மற்றவர்கள் அங்கு காத்திருப்பார்கள். ஆகவே அந்த சாலையில் பயணிகளின் கூட்டங்கள் அணியணியாகச் சென்று கொண்டிருக்கும். யோனாவோ லீபனோனின் மலைகளை ஏறிட்டுக்கொண்டிருந்தார்.

யாக்கோபு தனக்கு ஒரு மனைவியைத் தேடிச்சென்ற பாதையில் யோனா சென்று, தன்னுடைய முற்பிதாவாகிய யாக்கோபை பிரதிபலித்தாரா ? அவர் ஈசாக்குக்கு மணவாட்டியை கொண்டு வரச்சென்ற ஆபிரகாமின் ஊழியக்காரனாகிய எலியேசரை நினைத்திருப்பாரா ? இந்த மலைகள் இத்தனை உணர்ச்சிவசமான சம்பவங்களுக்கு சாட்சியாக நிற்பதை எண்ணி யோனாவின் மனம் எவ்வளவு வேகமாக துடித்திருக்கும்.

அதேபோல, ஐபிராத்து நதியண்டையில் உள்ள கர்கேமிசிலே நேபுகாத்நேச்சாரின் கரங்களில் எகிப்திய பார்வோனின் விதி முடிந்தது. இறுதியாக அவன் யூதாவின் தலையெழுத்தையும் முடித்தான். (எரேமி 46:2) இங்கு ஒரு நிறுத்தம் இருந்தது. ஏனெனில், எகிப்திலிருந்தும் கானானிலிருந்தும் வந்த சாலைகள், மேற்கில் ஐரோப்பாவையும், கிழக்கில் அசீரியாவையும் சேர்ந்த மிகப் பெரிய சாலையில் இணைந்தது. ஒரு வேளை யோனா எந்த விதமான விலங்குகளையும் பயன்படுத்தாமல் சென்றிருந்தால் இந்த இடத்திற்கு அவர் கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் பயணித்திருக்கவேண்டும். மேலும் பலமைல் தூரம் அவர் செல்லவேண்டிதாகவும் இருந்தது.

பல மாலைகள் சென்றபோது, அந்த வியாபாரக் கூட்டம் மலைகளிலிருந்து மறையும் சூரியனின் வெளிச்சத்தால் மின்னுகிற அந்த நகரத்தை நோக்கி சுழல் பாதையில் கீழ்நோக்கி வந்திருக்கும். வனதெய்வங்கள் வாழும் கற்பனை இடம்போல மிக அரிதான அழகுள்ள இடமாக இருந்தது. இந்த பட்டணமானது மலையோரத்தில் பிறைவடிவத்தில் கட்டப்பட்டிருந்தது. அதன் வெள்ளை நிற சுவர்களும், மிக அழகாகக் கட்டப்பட்ட மெல்லிய ஒளிக்கதிர்களை பிரதிபலிக்கும் பளிச்சிடுகிற அரமனைகளும், அதற்கு நடுவாக நின்ற கோவிலும் மிக நேர்த்தியாகவும் பரிபூரணமாகவும் காட்சியளித்தது. யோனாவின் கண்கள் ஆரான் பட்டணமாகிய சந்திர தெய்வத்தின் நகரத்தைக் கண்டபோது, அவருடைய மனது வேகமாக துடித்திருக்கும். இந்த இடத்தில்தான், தேராகோடு ஆபிரகாம் இருந்தார். நீண்ட காலத்திற்குமுன் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் புதிதாகவும், புத்துணர்வோடும் கொடுக்கப்பட்டது. தேராகு

மரித்தவுடன் ஆபிரகாம் அவ்விடத்தை விட்டுச் சென்றார். தகப்பனை மட்டும் அல்ல, அந்த பட்டணத்து கலாச்சாரங்கள், மகிமையான விக்கிரகங்கள், நாகரீகங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, தேவன் அவருக்கும், அவருடைய சந்ததிக்கும் நித்தியமாக தருவேன் என்று சொன்ன தேசத்திற்குப் புறப்பட்டுபோனார். "உனக்கும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் முழு குடும்பங்களையும் நான் ஆசீர்வதிப்பேன்". இப்படியாக, அந்த வாக்குத்தத்தம் தொடர்ந்தது. தொடர்ந்து வந்த ஆசீர்வாதத்தை நினிவே பட்டணத்தாரும் பெறுவதற்கு யோனாவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் அந்த ஆசீர்வாதத்தைப் பெறக்கூடாது என்று எண்ணி யோனா தர்ஷீசுக்கு ஓடிப்போனார். இந்தபட்டணத்தை கண்ட யோனா மிகவும் பெருமை அடைந்திருக்கவேண்டும். அனைத்தையும் நினைவில் கொண்டு, தேவன் அவருக்குக்கொடுத்த வேலைகளை விசுவாசத்தோடு செய்வதற்கு மேலும் உறுதியோடு தீர்மானித்திருப்பார்.

ஆனால் ஆரானின் மகிமைகள் பின்னாக விடப்பட்டது. கடைவீதிகள், பூங்கா, நீரூற்றுகள், விமர்சனமாக நடத்தப்பட்ட சமயசடங்கான விழாக்கள், அனைத்தும் பின்னாகசென்றது. வியாபாரக்கூட்டம் தனிமையாக வெட்டாந்தரையில் பயணித்தது. அதைகடந்து செல்லும்போது, பிறை வடிவத்தில் இருந்த பட்டணம் மலைக்கு அந்த பக்கத்தில் மறைந்து விட்டது. இப்போது மனிதர்கள் குடியிராத பசுமை நிறைந்த புல்வெளியிலிருந்த பாதையில் அனைவரும் நடந்தார்கள். தனிமையில் ஆழ்ந்த சிந்தையிலிருந்த மலைகள் இடதுபக்கத்திலும், முடிவில்லாத பாலைவனம் வலதுபக்கத்திலும் காணப்பட்டது. ஆனால் அந்தசாலை டைகிரீஸ் நதியிலும், நினிவே பட்டணத்திலும் முடிவடைந்தது.

ஆனால் யோனா ஆரான் மற்றும் கர்கேமிசைக் கடந்திருக்க வாய்ப்பில்லை. முக்கியமான வியாபாரவழி எகிப்திலிருந்து தமஸ்குவின் வழியாக வடபுறமாகசென்று கர்கேமிசின் மேற்கு-கிழக்கு பகுதியில் இணையும். இதற்கு மாற்றுவழியாக தமஸ்குவின் முக்கிய பாதையை விட்டுவிட்டு, நேரே கிழக்குநோக்கி நினிவேக்குச் சென்றது. இதில் கிட்டத்தட்ட 200 மைல் வழியின் தூரம் குறைந்தது. இந்த வழியில்சென்ற வியாபாரிகளோடு யோனா சென்றிருந்தால், வடக்கு திசையை விட்டுவிட்டு தமஸ்குவிலிருந்து கிழக்குதிசையில் சென்று கடினமான ஒருமலைத்தொடரை (இப்பொழுது பால்மைரா என்று அழைக்கப்படுகிறதும் ஆதியில் சாலொமோன் இராஜ்யத்தின் வடபுர எல்லையாக விளங்கியது- 1இரா 9-18) கடந்திருக்கவேண்டும். அதற்குபின் 120 மைல் தண்ணீரற்ற மகா பெரிய சிரியாவின் பாலைவனத்தை மிகக்கஷ்டப்பட்டு கடந்திருக்கவேண்டும். அங்கு பகலில் சூரியவெப்பம் மிகஅதிகமான உஷ்ணத்தில்

மனிதர்களை வாட்டியது. இரவில் பனியின் குளிர்ச்சி மனிதர்களை உறையவைத்தது. மகாபெரிய ஐபிராத்நதியின் ஆழமில்லாத பகுதியிலிருந்து தெற்கில் பாபிலோனுக்கும், வடக்கில் ஆரானுக்கும் சென்ற பாதையில் வந்துசேர வேண்டியதாக இருந்தது. இந்தப்பாதையை ஒருமுறை கடந்த ஆபிரகாமை அவர் நினைத்திருக்க வேண்டும்.

ஆற்றைக் கடந்தபின் பசுமைநிறைந்த புல்வேளி நிலத்தில் அவர் காணப்பட்டார். அங்கு வளைந்தோடும் அருவிகள் காணப்பட்டது. அங்கிருந்தசாலை, மற்றொரு பெரிய நதியாகிய இதெக்கேலுக்கு வழிநடத்தியது. அதற்குப்பின் யோனா வந்துசேர வேண்டிய நினிவே பட்டணம் டைகிரீஸ் நதிக்கரையில் நின்றது.

இப்போது யோனாவின் பயணத்தின் முடிவு நெருக்கியது. சுமார் எட்டு முதல் பத்து வாரங்களின் பிரயாணத்தில், அவருக்கு பின்னாகச் சென்ற ஒவ்வொரு வியாபாரக்கூட்டதையும் பார்த்துக்கொண்டு வந்தாரேதவிர, அவர் அவர்களோடு திரும்புவதற்கு எப்போதுமே யோசிக்கவில்லை. தேவனுடைய அழைப்புக்கு அவர் விசுவாசமுள்ளவராக நடந்தார். ஒருநாள், அந்த வியாபாரக்கூட்டத்தின் தலைவனாகிய ஒரு அரபுதேசத்தை சேர்ந்தவன் கையை நீட்டினான். தொலை தூரத்தில் பரந்து விரிந்த பட்டணத்தையும் அதில் உள்ள கோபுரங்களையும் கண்டார். அவர் நினிவே பட்டணத்தை அடைந்தார்.

"யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான், நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகாபெரிய நகரமாயிருந்தது." (யோனா 3-3)

மகா பாபிலோன் எழும்புவதற்கு முன்னதாக, பண்டைய காலத்தில் நினிவே பட்டணம் மிகப்பெரிதும், சிறந்த பட்டணமாகவும் விளங்கியது. நேபுகாத்நேச்சார் கட்ட துவங்குவதற்கு முன் அது பாழடைந்திருந்தது. ஆகவே அந்த இராஜா பாபிலோனை மிகச்சிறந்த பட்டணமாகக் கட்டினான். ஆனால், யோனா தன்னுடைய செய்தியை கொடுக்கவேண்டிய அந்த இடத்தை நோக்கி தன்னுடைய கண்களை ஏறெடுத்தபோது அந்த பட்டணம் அவரை மிகவும் கவர்ந்தது. அப்போது, அந்த பட்டணம் அவ்வளவு பிரமாண்டமான உச்சநிலைக்கு செல்லவில்லை என்றாலும், யோனாவின் பார்வைக்கு அந்த பட்டணம் மிகச் சிறப்பாகத் தோன்றியது. பின்பு நினிவே பட்டணத்தை சனகரீப் கட்டி எழுப்பினான்.

இந்த "மகா பட்டணம், மூன்று நாள்" பிரயாண தூரமாக இருந்தது. உறுதியாக இணைக்கப்படாத அநேக நகரங்களைக் கொண்ட பட்டணமாக இருந்தது. அவைகளுக்கு இடையில் பூங்காக்களும், நகரங்களின் ஓரத்தில் கட்டப்பட்ட குடியிருப்பு பகுதிகளும் அவைகளை இணைத்தது. இரண்டு நதிகளாகிய டைகிரீஸ் மற்றும் ஸாபின்

சந்திப்பிற்கு இடையில் உள்ள ஒரு முக்கோண பரப்பில் இந்த பட்டணம் காணப்பட்டது. இந்த முக்கோண பரப்பின் ஒவ்வொரு பக்கங்களும் இருபது மைல் தூரம் கொண்டதாக இருந்தது. இதைச்சுற்றி வருவதற்கு "மூன்று நாள்" பிரயாணதூரம் என்று சொல்லப்பட்டிருக்கவேண்டும்.

இராஜாக்களின் அரமனைகளும், தலையான கோவில்களும் நின்னுவா என்ற மிகநேர்த்தியான இடங்களில் பாதுகாப்பான கோட்டைக்குள் கட்டப்பட்டிருந்தது. இது மீன் - தெய்வத்தின் நகரமாகத் திகழ்ந்தது. அந்த நகரத்தின் வியாபாரஸ்தலம் இருபது மைல் கீழ்நோக்கி காலா என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் கப்பல்களிலிருந்து சரக்குகளை ஏற்றவும், இரக்குவதற்கான இடங்களும், கப்பல்களை பழுதுபார்க்கும் இடங்களும் இருந்தன, அதற்கும் அநேக மைல்களுக்குக்கீழ் அந்த நதியின் மேல் ஒருஅணை கட்டப்பட்டிருந்தது. இதற்கு இடையில், ஜனங்களின் குடியிருப்பு வீடுகளும் மலர் தோட்டங்களும் காணப்பட்டது.

இன்றைய புதைப்பொருள் ஆராய்ச்சிக்கு நின்னுவா பேர்பெற்ற இடமாக உள்ளது. ஒருவேளை யோனா இதற்கு மத்தியில் சென்று, பொதுஜனங்களிடம் செய்தியை அறிவித்திருக்கவேண்டும். இதுவே மிகப் பொருத்தமானதாக இருந்திருக்கவேண்டும். அவருடைய கற்பனைக்கு அப்பாற்பட்ட விஷயங்களை அவர் காண்கையில், சந்தேகத்திற்கு இடமின்றி நின்னுவாவிலுள்ள அற்புதங்களை அவர் மிகுந்த ஆர்வத்தோடு கண்ணோக்கியிருக்கவேண்டும். வியாபாரிகளின் பட்டணமாகிய தமஸ்கு அவரை நிச்சயமாக கவர்ந்திருக்கும். அடுத்து, மிகுந்த நேர்த்தியான நாகரீகத்தையும் கவலைகளையும் ஆரானில் கண்டு ஆச்சரியப்பட்டார். ஆனால் நினிவே, தன்னுடைய அபாரமான கட்டடகலைகளுக்குப் பேர்பெற்றதாக இருந்தது. அதனுடைய பிரமாண்டமான கோட்டைகள், அநேக வண்ணங்கள் கொண்ட கற்பலைகைகள், மார்பிள்களைக் கொண்டு கட்டப்பட்ட மாபெரும் அரமனைகள், மிக பெரிதாகவும் பலமாகவும் கட்டப்பட்ட கோவில்கள், சிறகுகளைக் கொண்ட சிங்கங்களின் மிக பிரமாண்டமான உருவசிலைகள் மற்றும் அநேகமிருகங்களின் சிலைகளும் ஒவ்வொரு திருப்பத்திலும் காணப்பட்டது. கொடூரமான மிருகத்தனமான வல்லமையே - அசீரியர்களின் உண்மையான குணலட்சணங்கள் என்று இப்படிப்பட்ட முக்கிய கூறுகளைக்கண்ட யோனாவின் மனதில் நன்கு பதிந்திருக்கவேண்டும். இராஜாவின் அரமனை நின்ற அந்த இடத்திற்கு யோனா செல்ல கம்பீரமான சாலை வழிநடத்தியது. சுறுசுறுப்பாக தங்களுடைய வேலைகளில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அவர் சொல்லும் செய்தியைக் கேட்பார்களோ என்ற சந்தேகம் கூட அவருக்கு வந்திருக்கலாம். யோனாதீர்க்கதரிசி இந்த செய்தியை சொல்லுவதற்குமுன் இயற்கையாகவே கொஞ்சம் தயங்கியும் இருக்கலாம். அரமனைப் பகுதியைச் சுற்றி

வந்த பாசனகால்வாயின் மேலுள்ள பாலத்தில் அவர் கொஞ்சநேரம் நின்று கொண்டு, அங்கு அமைதியாக சென்று கொண்டிருந்த தண்ணீரைப் பார்த்துகொண்டு காலம் தாமதித்திருக்கலாம். பல வருடங்களாக காய்ந்துகிடக்கும் ஒரு சாக்கடையாக இந்த கால்வாய் இப்பொழுது காணப்படுகிறது. ஆனால் யோனாவின் நாட்களில் இதை தெபில்ட்டு கால்வாய் என்று அழைத்தார்கள். இதன் கரையில் பூக்கள் நிறைந்த மலர்வனங்களும், செடிகளும், பசுமையான புல்வெளிகளும் காணப்பட்டது. ஆனால் அதை யோனா எட்டிப் பார்த்தபோது அவரை திரும்பி முறைத்து பார்த்த அவருடைய உருவத்தின் பிரதிபலிப்பை மட்டும் அவர் கண்டிருக்கவேண்டும். அவர் அரமனைப் பகுதியின் மற்றொரு பக்கத்திற்கு சென்று, பட்டணத்தை நடுவாகக் கடந்து, அநேக கோவில்களும், அரமனைகளும் உள்ள மற்றொரு உயரமான இடத்தில் நின்றிருக்கவேண்டும். இன்றைய நாளில் நமக்கு இவைகளைப் பற்றி ஒன்றும் தெரியாதிருந்தாலும் மலையின் இப்பகுதி "நெபி யூனஸ்" (Prophet Yunus - தீர்க்கதரிசியான யோனா) என்று அழைக்கப்படுகிறது. இதைச் சுற்றி உச்சியில் ஒரு அரபு கிராமம் உள்ளது. அதன் நடுவில் ஒரு பள்ளிவாசல் காணப்படுகிறது. மேலும் அந்த பள்ளிவாசலுக்கு அடியில் யோனாதீர்க்கதரிசி தன்னைத்தான் புதைத்துக்கொண்டார் என்று அங்குள்ள முகமதியர்கள் கூறுகிறார்கள். ஆகவே அந்த முழுமலையும் பரிசுத்தமாக வைக்கப்பட்டிருப்பதினால் அந்த இடத்தில் எந்தவிதமான புதைப் பொருள் ஆராய்ச்சிகளை செய்வதற்கு அனுமதிகொடுக்கப்படுவதில்லை. அந்த பள்ளிவாசலின் உட்புறத்திலிருந்து யோனாவின் கல்லறைக்கு இறங்கு படிகட்டுகள் உள்ளது. ஆனால் எந்த கிறிஸ்தவர்களும் அதில் அனுமதிக்கப்படுவதில்லை. இதற்கு பதிலாக பள்ளிவாசலின் சுவற்றில் தொங்கவிடப்பட்ட பெரிய மீனின் ஒரு பகுதியை அனைவருக்கும் காட்சியாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தமீன் யோனாவை விழுங்கின திமிங்கிலத்தின் ஒருபகுதி என்று உறுதியாக அந்த ஜனங்களால் சொல்லப்படுகிறது. அந்த கிராமத்தில் வாழும் ஜனங்கள் தாங்கள் வாழும் மலைக்கு எதிரில் கிட்டத்தட்ட ஒருமைல் தூரத்தில் உள்ள மலையை சுட்டிக்காட்டி அந்த திமிங்கலம் புதைக்கப்பட்ட இடத்தையும் காண்பிக்கிறார்கள். அந்த மலை நூறு அடி உயரத்தில் உள்ளது. அசீரிய கலைகளின் அநேக அதியசயங்ளும், அரமனைகள் மற்றும் கோவில்களின் எஞ்சியிருப்பவைகளும், எண்ணிபார்க்கக்கூடிய அனைத்து துறைகளுக்கு வெளிச்சம் கொண்டு வருவதற்கு பயனுள்ளதாக திகழ்ந்த 24,000 எழுதப்பட்ட களிமண் பலகைகளை கொண்ட நூலகமும் காணப்பட்டாலும், அந்த திமிங்கிலத்தின் எலும்புகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

இவ்வாறாக, யோனா அந்த பட்டணத்தில் பிரயாணம் செய்த முதல்நாளில் (வசனம் - 4) அஷூர் வாயில் வழியாக நுழைந்த காலா மற்றும் அஷூருக்கு வழிநடத்தும் குடியிருப்பு பகுதிகளில் சென்று தேவன் சொன்ன செய்தியை அறிவித்திருக்கவேண்டும். "... இன்னும் நாற்பதுநாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்..." என்று இந்த சம்பவத்தில் எழுதியுள்ளபடி, ஒரு வெளிப்படையான அறிவிப்பை யோனா கொடுத்தார். நிச்சயமாக, சந்தேகத்திற்கு இடமின்றி பிரசங்கத்தின் உச்சக்கட்ட வார்த்தைகளை மட்டுமே இங்கு பதிவு செய்திருக்கவேண்டும் ஏனெனில், இன்னும் அநேக காரியங்கள் இங்கு பிரசங்கித்திருப்பார். யோனா மிக சிறப்பாக தன்னுடைய திறமையை பயன்படுத்தி தன்னால் முடிந்த வரைக்கும் பிரசங்கித்திருக்க வேண்டும். மனந்திரும்பினால் நினிவே பட்டணத்தின் மேல் நிழலிட்டுக் கொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பை நீக்கிவிடுவேன் என்று தேவன் கொடுத்த வாக்குறுதியையும் மறந்து நினிவே ஜனங்களை தங்களுடைய தீமையைவிட்டு விலக்கவும், தேவனிடத்தில் திரும்பவும், அவரால் உண்டான எல்லா எச்சரிப்புகளோடும் அவர் தேவனுடைய செய்தியை அறிவித்திருக்கவேண்டும்.

நினிவே பட்டணத்தார் யோனாவை விசுவாசித்தார்கள். இந்த ஆச்சரியமான கதையில் நடந்த ஆச்சரியமான சம்பவம் இதுவே. பல தலைமுறைகளால் தங்களுடைய காட்டு மிராண்டித்தனமான வன்முறைகளுக்கு பேர்போனவர்கள்- கொலையும், கொள்ளையும் மற்றமனித நியாயமற்ற கொடூரமான செயல்களைச் செய்வதே பழக்கமாக இருந்தவர்கள், பரிச்சயம் அல்லாத ஒருவருடைய பிரசங்கத்தினால் தங்களுடைய கிரியைகளுக்காக மனம்வருந்தினார்கள் என்பது ஒரு குறிபிடத்தக்க விளைவாக இருந்தது. "அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள், பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்." (வசனம் - 5) இது ஒரு சாராருக்கு மட்டுமே கொடுக்கப்படாமல் - "இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான்." (வசனம் -6)

யோனா வெற்றி சிறந்த ஒரு தீர்க்கதரிசியாக திகழ்ந்தார். இஸ்ரயேல் இழந்த நிலப்பகுதிகளை மீண்டும் கொடுக்கப்படுவதாக வாக்களித்தார். அவருடைய வார்த்தைகள் உண்மையானது. இப்படியாக மதமற்ற அந்த மாலுமிகள் யோனாவின் தேவனுடைய வல்லமையை அறிந்து அவர்களை மரணத்திலிருந்து தப்புவிக்க வல்லவராக இருக்கிறார் என்பதை உணரும்படிச் செய்தார். இப்போது ஒரே மனிதனாக நின்று பழங்காலத்து உலகில் கொடூரமான

ஜாதியாகிய நினிவே பட்டணத்தாரை மனந்திருப்பி, தேவனுடைய ஜனங்களாக்கினார். அசீரியர்களின் 2000 வருட வரலாற்றில் இந்தசம்பவம் மட்டுமே அவர்களுடைய மனதை உலுக்கியது. கர்மேல் பர்வதத்தில் எலியாவினால் இஸ்ரயேல் ஜனங்கள் மனந்திரும்பியது எவ்வளவு பெரிதாக காணப்பட்டதோ அதற்கு சமமாக இங்கு யோனாவினால் நினிவே பட்டணத்து ஜனங்கள் மனந்திருப்பினார்கள்.

இந்த மனம் மாற்றத்திற்குக் காரணமாக இருந்த செயல்திறன் என்ன ? தீர்க்கதரிசியின் வெறும் திறமையான பிரசங்கமும், அவருடைய நேர்மையும், உணர்ச்சியூட்டும் வேண்டுகோள் மட்டுமே இதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடுமோ ? அல்லது அசீரியர்களின் தீயசெயல்களுக்கு ஏதோ ஒருநாள் தண்டனை கொடுக்கப்படும் என்று அவர்கள் முன்னதாகவே அறிந்திருந்தார்களா ? அல்லது வேறேதும் காரணங்கள் இருக்க வாய்ப்புள்ளதா ?

நிச்சயமாக காரணங்கள் இருந்திருக்கக்கூடும். தாகோன் என்ற மீன் - தெய்வத்தை வழிபட்டு வந்த அசீரியர்கள் யோனா தர்ஷீசுக்கு கப்பலேறியபோது, சந்தித்த பயங்கரமான அனுபவங்களையும், அதற்குபின் அவர் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நினிவேவுக்கு பயணித்து வந்த காரியங்களையும் - நினிவே பட்டணத்து ஜனங்களிடம் எதிரொலித்திருக்கவேண்டும். கேள்விப்பட்ட காரியங்கள் அவர்களுக்குள் இந்த மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். நினிவே பட்டணத்தில் உள்ள அரமனைகளில் இந்த தாகோன் காணப்பட்டது. மேலும் தெய்வங்கள் பற்றிய பழங்காலத்து கற்பனைக் கதைகளில் ஓனேஸ் என்ற விசித்திரமான தெய்வீக பிராணி இருந்ததாம். அது பாதிமனிதனும், பாதிமீனுமாக இருந்ததாம். இது கடலிலிருந்து வெளியே வந்து, விவசாயத்தைப் பற்றியும், நாகரீகத்தைப்பற்றியும் மனுக்குலத்திற்கு போதித்து வந்ததாம். இந்த பழங்காலத்து கதையில், மீனின் வாயிலிருந்து வந்த மனிதன், மீண்டுமாக இந்த உலகத்தை சீர்ப்படுத்தவந்தார் என்பதை நிழலிட்டு காட்டுகிறது. ஆகவே இந்த மூடநம்பிக்கையை விசுவாசித்த நினிவே பட்டணத்து மக்கள், யோனாவை நம்பியிருக்கவேண்டும்.

தேவன் யோனாவை அழைத்த இரண்டு முறைகளுக்கும் இடையில் உள்ள, கால அளவைப்பற்றி நமக்கு பதிவுகள் இல்லை. சில மாதங்களுக்குப்பின் அவரை தேவன் அழைத்திருக்கலாம். கிழக்கு நோக்கிச் சென்ற வியாபாரிகளும், வியாபாரக் கூட்டங்களும் யோப்பாவின் வழியாக எகிப்துக்கும் அசீரியாவுக்கும் ஓயாமல் போக்கு வரத்துமாக இருந்தார்கள். கடலிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருட்கள் இந்த வியாபாரிகளின் மூலம் யோப்பாவிலிருந்து நினிவேக்கு சென்றது. ஆகவே, தேவன் நியமித்தபணியை புறக்கணித்துவிட்டு தர்ஷீசுக்கு சென்ற இஸ்ரயேலின் தீர்க்கதரிசியை, தேவன் ஒரு பெரியமீனின் மூலம் திரும்ப யோப்பா பட்டணத்திற்குக் கொண்டுவந்தார்

என்ற செய்தி யோனா நினிவேக்கு செல்வதற்குமுன் நினிவே பட்டணத்தார் கேள்விப்பட்டிருப்பார்கள். இப்படியாக வியாபாரிகள் மூலமாக நினிவே பட்டணத்துமக்கள் அனைவருக்கும் செய்தி பரவியிருக்கும். அந்த தீர்க்கதரிசியை தன்னுடைய வேலையைத் திரும்ப செய்வதற்கு தன்னுடைய தூதனை அனுப்பிய கடல் தெய்வத்தை நினிவே பட்டணத்து ஜனங்கள் வழிபட்டிருந்திருப்பார்கள். மேலும் யோனா பயணிக்கும்போது, தன்னுடைய சகபயணிகளோடு, இரவு நேரங்களில் ஓய்வு எடுக்கும் நேரங்களில் நெருப்பு மூட்டி அமர்ந்த சூழ்நிலையில் அனைவரும் அவர்களுடைய கடந்தகால அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்திருக்கவேண்டும். இப்படியாக, பயணிகள், நினிவேக்கு வந்து சேர்ந்தபோது, இவைகள் இயல்பாகவே சொல்லப்பட்டிருக்கவேண்டும். மேலும் காணக்கூடிய இந்த யோனா கதையின் முக்கிய கதாபாத்திரர் என்று சாட்சியாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும். வெகுசீக்கிரத்தில் இவர் ஆச்சரியத்திற்கும், அதிசயத்திற்கும் ஒரு பாத்திரமாக மாறியிருக்கவேண்டும்.

ஆகவே நினிவே பட்டணத்து ஜனங்கள் மத்தியில் அநேக சம்பாஷணைகள் அநேக கோணங்களில் நடந்திருக்கவேண்டும். அந்த நாட்டின் இராஜாவும், அவனுடைய ஆலோசகர்களும், அவனுடைய ஆசாரியர்களும் கலந்து ஆலோசித்து தங்களுடைய சொந்த தெய்வம் தங்களுக்காக அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி உபத்திரவத்தில் அகப்பட்டபோதும் அவரை திரும்ப கொண்டுவந்து சேர்த்து தாங்கள் அறியாத தேவனைப்பற்றி அறிவிக்க ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார் என்று முடிவுக்கு வந்திருக்கவேண்டும். இதில் யோனாவின் தேவன் சர்வவல்லமை படைத்தவர் என்பதை உணர்ந்தார்கள். அவருடைய வார்த்தைகளை முழு நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு, தானும் தன் பிரதானிகளும் முன்னதாகவே நிர்ணயம்பண்ணின கட்டளையை முழு தேசத்திற்கும் தன்னுடைய முத்திரையை போட்டு அனுப்பினான்.

7ம் வசனத்தில் "கட்டளை" என்று பயன்படுத்தப்பட்ட வார்த்தை அரசாங்க கட்டளைகளை முத்திரையிட பயன்படுத்தப்பட்டது. அசீரியர்கள், பாபிலோனிய இராஜாக்கள் மற்றும் நேபுகாத்நேச்சார், கோரேஸ், தரியுவும் உண்மையில் இதே வார்த்தையை பயன்படுத்தினார்கள். இது தானியேல் மற்றும் எஸ்றாவின் புத்தகத்தில் காணப்படுகிறது. இந்த புத்தகத்தின் எழுத்தாளனாகிய யோனா நினிவேபட்டணத்தில் இந்த காரியங்கள் சம்பவிக்கும்போது, அங்கு இருந்ததே இதில் ஆர்வமூட்டும் சாட்சியாக இருக்கிறது. 7ம் வசனத்தில், அரசாங்க அறிவிப்பு அதன் பாணியில் மாற்றமுடியாத அளவிற்கு உலோக அச்சு தகடுகளில் எழுத்துக்கள் பொருத்தப்பட்ட

கட்டளையாக அனுப்பப்பட்டது. அவைகள் சரியாக வாசிக்கப்பட்டிருந்தால் இப்படியாக வாசிக்கப்பட்டிருக்கவேண்டும் -

"And he Caused it to be proclaimed, and published through Nineveh:-

"BY THE DECREE OF THE KING AND HIS NOBLES

“Be it proclaimed: (8,9 வசனங்கள்)

இந்தகட்டளைகள் பட்டணந்தோறும் அறிவிக்கப்பட்டது, நிச்சயமாக ஒவ்வொரு ஆவணக்காப்பகத்திலும் இந்த கட்டளையில் ஒரு பதிவு வைக்கப்பட்டிருந்திருக்கும். அந்த அரமனை நூலகத்தில் இருந்த 24,000 களிமண் பலகைகளிலும் இந்த செய்தி நிச்சயமாக காணப்பட்டிருக்கும். அவைகள் இன்று உலக பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதில் பெரும்பாலான வார்த்தைகள் இன்னும் மொழிபெயர்க்கப்படவில்லை. நிச்சயமாக யோனாவைப்பற்றிய காரியங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். யோனவின் தலைசிறந்த நீதிகிரியைகள் அப்போது வெளிப்படும்.

அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். இதுவே தேவனுடைய குணம். சாகிறவனுடைய சாவை தேவன் விரும்புகிறதில்லை, மாறாக மனந்திரும்புவதையே அவர் விரும்புகிறார். மூத்த குமாரன், மனந்திரும்பிய குமாரன் உவமையில் அந்த தந்தையைப் போல, மனந்திரும்பி வருபவர்களை தம்முடைய வீட்டிற்கு அழைத்துச் செல்ல எதிர்கொண்டுபோய், கட்டித்தழுவ அவர் காத்திருக்கிறார். இப்படியாக, மனுக்குலத்தின் பாவங்கள் எவ்வளவு கொடியதாக இருந்தாலும் சரி, அதைகுறித்து அவர் கவலைப்படாமல், அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக தேவன் இவ்வளவு காலங்கள் தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்தினார் என்பதை இந்த உலகத்தின் முடிவில் இந்த முழு மனுக்குலமும் புரிந்துகொள்ளும். அவர்கள், "யோனாவைக் காட்டிலும் பெரியவருக்கு செவிகொடுத்ததால், 3000 வருடங்களுக்குமுன் நினிவே பட்டணத்தார் பெற்ற இரட்சிப்பைக் காட்டிலும் பெரிதான இரட்சிப்பை அடைவார்கள். "துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான்." (எசே 18 :27)

## அதிகாரம் - 6

# பிதாவைப் போல

"யோனாவுக்கு இது மிகுவம் விசனமாயிருந்தது, அவன் கடுங்கோபங்கொண்டு..." (யோனா 4:1)

பழையஏற்பாட்டின் வரலாற்றில் யோனா தேவன்மேல் கொண்டிருந்த கோபம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அநேக மனிதர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, அவருக்கு கீழ்ப்படியாமல் போயிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக மோசே தேவனுக்கு விரோதமான செய்கையை செய்தாலும், யோனா துணிகரம் கொண்டதுபோல ஒருவரும் துணிகரம் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. யோனா தன்னுடைய நிலையை நன்கு உணர்ந்திருந்ததினால் இப்படிப்பட்ட துணிகரம் கொள்ள அவர் பழக்கப்பட்டார். அவர் எளிதில் கோபம் கொள்பவரும், எரிச்சலான குணமுடையவரும், குறுகிய மனபான்மையுள்ளவரும், சுயநலமுள்ளவரும், மிகுந்த கோபமுள்ளவருமாக அநேக பழங்காலத்து விமர்சகர்கள் விமர்சித்திருக்கிறார்கள். ஆனால் இந்தக்கதையில் இதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. சர்வவல்லவருடைய இறுதி முடிவை அவர் மாற்றவிரும்பவில்லை. தேவனுடைய மனதை திசைத்திருப்ப அவர் எந்த விதத்திலும் கெஞ்சவில்லை. ஒருவேளை அந்த பட்டணம் ஆக்கினையிலிருந்து தப்பித்தால், இஸ்ரயேல் சந்ததிக்கு இனிவரும் பேராபத்துகளைக் குறித்தும் அவர் விவாதிக்க விரும்பவில்லை. தேவனுடைய அந்த தெய்வீக நியாயத்தீர்ப்பை அவர் முழுமையாகவும், மனமுவந்தும் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் தேவனோடு கொண்டிருந்த ஒருமித்த மனநிலையானது, அவரோடு (தன்னுடைய சிந்தையில்) பேசுவதற்கான சிறப்புரிமையை யோனா பெற்றிருந்தார். நாம் நம்முடைய பரிச்சயமான சிநேகிதரோட பேசுவதுபோல் யோனா, -" *கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி - ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா ? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன், நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்..*" (வசனம் -2) இஸ்ரயேலின் வரலாற்றின் துவக்கத்தில் இந்த வார்த்தைகள் அற்புதமான வார்த்தைகளாக சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் தேவனைப்பற்றி முழுமையான அறிவை யாரும் பெற்றிருக்கவாய்ப்பில்லை. ஆனால், அந்த தேவன் அன்பானவர் என்றும் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பியதால் அவரால் அறிவிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றமாட்டார் என்பதையும் நன்கு நிச்சயத்திருந்த ஒருமனுஷன் இவரே. இவருடைய சொந்த விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் எதிராக அசீரியர்களை இரட்சிப்பதற்கான கருவியாக பயன்படுத்தப்பட்டு, வருங்காலத்தில் தன்னுடைய சொந்த ஜனங்களை வேதனையில் விட்டுவிட இவர் பயன்படுத்தப்பட்டார். இதைத்தவிர

அவருடைய மனம் வேறு எதையும் சிந்திக்கவில்லை. ஒருநாள் அசீரியா தன்னுடைய மனந்திரும்புதலையும், சாந்தமான வழியையும் மறந்துவிட்டு புதிதாக தன்னுடைய பழைய வழிகளுக்கு திரும்புவார்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அப்போது இஸ்ரயேல் பாழாக்கப்படும் என்று பழையஏற்பாட்டில் அவர்களைகுறித்து சொன்ன தீர்க்கதரிசனங்களும், காணப்பட்ட தரிசனங்களும் எளிதில் நிறைவேறும் என்றும் அறிந்திருந்தார். இந்த காரியங்களை அவரால் தாங்கமுடியவில்லை. இனிஅவர் உயிர்வாழ்வதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்பதை உணர்ந்ததினாலும், அவருடைய இருதயத்தில் உள்ள கசப்பை அவரால் தாங்கமுடியாததினாலும், மரணத்தினாலாவது அவருக்கு ஓய்வு கிடைக்கும் என்றெண்ணி, தன்னுடைய மரணத்திற்காக ஜெபித்தார். *"இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும், நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்."* (வசனம் - 3) வயதுசென்ற எலியா தீர்க்கதரிசியைப்போல, தன்னுடைய உற்சாகத்தையும் ஆவியையும் முழுமையாக இழந்தார். அவர் இஸ்ரயேலின் விடுதலைக்காக எதையும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. வெற்றியடைக்கூடிய அளவுக்கு அவருக்குபின் இருப்பவர்கள் ஒருவருமில்லை. அவருடைய இனஜனங்கள் உபத்திரவப்படுவதைக்காண அவரால் தாங்கமுடியவில்லை. அற்புதமான பாதுகாப்பையும், மீட்பையும் இவர் அனுபவித்திருந்தாலும், இப்பொழுது அவருடைய மரணத்திற்காக வேண்டினார்.

அசீரியா மனந்திரும்பியதால் அவர்களுக்கு வரக்கூடிய அழிவிலிருந்து அவர்கள் காக்கப்பட்டதுபோல, இஸ்ரயேலர்கள் மனம் திரும்பினால் நிச்சயமாக காக்கப்படுவார்கள் என்ற காரியத்தை யோனா கொண்டிருந்த ஆழமான துயரத்தில் மறந்துவிட்டார். யோனா தன்னுடைய சொந்த ஜனங்களின் பாவங்களைப் பாராமல் அல்லது கவனியாமல் விட்டுவிடுவதை மட்டுமே அவருடைய குறைவான மனநிலையை எடுத்துக்காட்டுகிறது. அவர் நினிவே பட்டணத்தின் மேல்வரும் நியாயத்தீர்ப்புக்காக ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். ஆனால் பாவம் செய்த இஸ்ரயேலின் மேல் தண்டனை வருவதை அவர் விரும்பவில்லை.

சதா காலங்களிலும் கற்றுகொள்வதற்கான பாடம் இந்த ஒரு உண்மையில் உள்ளது. *"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன ?"* (லூக்க 6:41) என்று இயேசு கூறுகையில், இதில் உள்ள பாடத்தை நம்முடைய ஆண்டவராம் இயேசு ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் , அதை தனிமனித காரியமாக மாற்றினார். ஆகவே எல்லா பாடங்களைக் காட்டிலும் பெரிதான ஒரு பாடத்தை யோனா இன்னும் கற்றுக்கொள்ளவேண்டியதாக இருந்தது. தேவனுடைய பார்வையில் உண்மையாக

இருப்பவர்களை அவர் காத்து, மீட்பதற்கு, அவருடைய மேலதிகாரத்தை செயலாற்றும் வல்லமையைக் குறித்து அவர் அறிந்துகொள்ளவேண்டியதாக இருந்தது.

யோனாவுக்கு தேவன் கொடுத்த பதிலில் - மிகவும், நெருங்கிய ஒரு தகப்பனுடைய அணுகுமுறை காணப்படுகிறது. எந்தவிதமான கோபமும் இல்லாமல், ஏறக்குறைய சாந்தமாக, "... நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ" என்று தேவன் யோனாவிடம் கேட்டார். சர்வவல்லமையுள்ள தேவன் இப்படியாக கேட்கிறார். அதற்கு ஏற்றவாறு பதில்கொடுப்பதற்கு யோனாவின் மனம் உருகவில்லை. அவர் உள்ளார்ந்த மனதுடன் தன்னுடைய கோபத்தை முழுமையாக வெளிப்படுத்தி, *"நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்..."* என்று பதில் அளித்தார். நம்முடைய வார்த்தைகளில் சொல்லப்போனால் - "*நான் மரிக்கும் அளவுக்கு கோபமாக இருக்கிறேன்*" என்றும் சொல்லியிருக்கலாம். வேதப் பகுதியில் கொடுக்கப்படாவிட்டாலும் இந்த சூழ்நிலையில் அவர் இப்படிப்பட்ட பதிலை தான் சொல்லியிருக்கவேண்டும். "*பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கேபோய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்"*. (வசனம் -5) மேலும், நினிவே பட்டணத்தார் மனந்திரும்பியபின், நாற்பது நாட்களுக்கு பின் என்ன நடக்கும் என்று யோனா அங்கு அமர்ந்து காத்திருந்திருப்பாரோ என்று நிச்சயமாகத் தெரியவில்லை.

ஆயினும், அவர் கிழக்கு திசையிலுள்ள நினிவேயின் வாயில் வழியாகவும், நினிவே பட்டணத்திற்கு தண்ணீர் கொடுக்கும் மிகப்பெரிய நீர்தேக்கங்களுக்கு அருகில், கோட்டை மதிற்சுவர் ஓரமாய், அந்த பட்டணத்தின் மட்டமான நிலப்பரப்புக்கு வழிநடத்திய சாலையில் அவர் வந்திருக்கவேண்டும். " *பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கேபோய்,"* என்ற வசனப் பகுதியை நாம் ஆதாரமாக எடுத்துகொள்ளலாம். இதற்கான ஆதாரத்தைக் கொடுக்கும் வசனப்பகுதியை அநேக விமர்சகர்கள் விட்டுவிடுகிறார்கள். மேலும், "*நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்ப்பதற்கு...*" என்றும் வாசிக்கிறோம். அதுமுதற்கொண்டு அந்தபட்டணம் தன்னுடைய சகல குடிமக்களோடும், அந்த நதியோடும் அதைத் தாண்டி 10 மைல் தூரமளவும், கிட்டத்தட்ட 20 மைல் பரப்பளவைக் கொண்டிருந்தது. இந்தபட்டணம் அழியவேண்டும் என்ற சிந்தையை உடைய ஒருவர் இந்த பட்டணத்தை முழுமையாக பார்வையிடும் அளவுக்கு உயரமான ஒரு இடத்தில் அமர்ந்திருக்கவேண்டும். இப்பொழுது அழிக்கப்பட்ட நினிவே பட்டணத்தின் பகுதி இன்றைக்கு இருக்கும் ஈராக்கு பட்டணமாகிய மௌசுலுக்கு எதிராக

இருக்கும் டைகிரீஸ் நதியின் கிழக்கு பக்கமாக உள்ளது. இது ஐம்பது மைல்களுக்கு அப்பால் உள்ள குர்திஷ் மலைகளோடிருக்கும் சமதளமான இடத்தில் உள்ளது. இந்த முழு மட்டத்திலும் இரண்டு உயர்வான மேடுகள் மட்டுமே உள்ளது. இதில் ஒன்றின் உயரம் ஜெபெல் சாத்திரா என்று அழைக்கப்படுகிறது. இது இரண்டாயிரம் அடிகள் உயரமும் ஒருமைல் அகலமுமானது. இது சரியாக நினிவேயின் கிழக்கு திசையில் 16 மைல் தொலைவில் உள்ளது. இந்த மலையின் சிகரத்திலிருந்து பார்க்கும்போது, கிட்டத்தட்ட 58 மைல்களுக்குப்பின் இருக்கும் தொடுவானத்தையும் ஒருவர் பார்க்கலாம். அந்த முழுபட்டணத்தையும் முழுமையாக பார்வையிடலாம். சந்தேகத்திற்கு இடமின்றி யோனா இந்த இடத்தை தேர்வு செய்து, தன்னுடைய குடிசையைப் போட்டுகொண்டு அந்த பட்டணத்தை முழுமையாக பார்த்துகொண்டு அமர்ந்திருக்கவேண்டும். எந்தவிதமான குறுக்கீடுகளும் அவரை பாதிக்காமல், அவர் பாதுகாப்பாக இருந்தார். நடக்கக்கூடிய காரியங்கள் என்னவாக இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருவர் உண்மையில் அவரோடு கூடியிருந்து, இந்தசம்பவங்களை அனுபவித்திருந்தால், யோனா அமர்ந்திருந்த இடஇயல்புவிளக்க விவரத்தை துல்லியமாக விவரித்திருப்பார்.

சரிவான அந்த இடத்தில் யோனா ஒரு குடிசையை போட்டு அதற்குள் அமர்ந்தார். டைகிரீஸ் நதி வனாந்தரவழியாக கடலுக்குள் பாய்வதையும், அவருக்குக்கீழ் பரந்து விரிந்திருந்த நினிவே பட்டணத்தை உற்றுநோக்கி கொண்டிருந்தார். நாற்பதாவது நாளும் அவர்அங்கு தங்கியிருந்து அந்தபட்டணத்தின் மேல்வரும் போராபத்தை அவர் எதிர்பார்த்து கொண்டிருந்தார். நோவாவின் நாட்களில், வந்த ஜலப்பிரளயத்தின்போது, வானத்தின் மதகுகள் திறக்கப்பட்டு, சகல உயரமானவைகளையும், மகிமைகளையும், பெருமையானவைகளையும் வாரிக்கொண்டு போனதுபோல, ஒரேஒரு பெரும் சுழல்காற்று நினிவே பட்டணத்தை ஒருபிடி மண்ணாக மாற்றுவது - தேவனுக்கு மிகஎளிதான காரியம் அல்லது ஆபிரகாமின் நாட்களில் வானத்திலிருந்து அக்கினிமழை பெய்து சோதோம் கொமோராவை அழித்ததுபோல அழித்திருக்கலாம். இப்படியாக, நினிவே பட்டணத்தை அழிக்க பல வழிகள் இருந்தது. ஆனால், 41-ஆம் நாள் சூரியன் உதித்தது. குளங்கள் தெளிவாகவும், பட்டணத்துமேல் படர்ந்திருந்த பனிநீங்க, பிரமாண்டமான அந்த பட்டணம் தன்னுடையமுழு பராக்கிரமத்தோடு வெளிப்பட்டது. எப்போதும்போல, நதியின் தண்ணீர் கடலுக்குள் புறண்டது. யோனா மிகவும் கோபம் அடைந்தார்.

ஆனால் தேவன், யோனாவோடு பேசி முடிக்கவில்லை. அவர் கற்றுகொள்ளவேண்டிய ஒருபாடம் இருந்தது. அதற்கான நேரம் வந்தது. அவர் கட்டின குடிசையில் இருந்தார். மரக்கிளைகளின் நிழலில் யோனா அமர்ந்திருந்தார்.

யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச்செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார், அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். ஒருவேளை செடிகொடிகள் வளரக்கூடிய ஒரு இடத்தில் யோனா தன்னுடைய குடிசையை அமைத்திருக்கவேண்டும். அங்கு வளர்ந்த செடியை "கிக்காயோன்" என்று எபிரெய மொழியில் அழைப்பார்கள். இது பொதுவாக ஆமணக்குசெடிக்கு பொருந்தும் என்று அனைவராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கு பெரிய இலைகள் உள்ளது. இந்தசெடி வேகமாக வளருவதற்கும், வேகமாக உதிருவதற்கும் பேர்பெற்றது. இந்தசம்பவத்தில் தேவன் இந்தசெடியை முளைப்பித்து யோனாவுக்கு நிழலுண்டாக்க கட்டளையிட்டார். தேவனால் பயமுறுத்தப்பட்ட அந்த தண்டனைக்கு அவர்கள் மனந்திரும்பினாலும், பாவத்தால் நிறைந்த அந்த பட்டணத்தின் மேல் தண்டனைவரும் என்று எதிர்பார்த்துகொண்டிருந்தார். இதை கவனித்துக் கொண்டிருந்தவர்மேல், ஆமணக்குசெடி ஒன்று வளர்ந்து, அடர்த்தியான இலைகளை அவர்மேல் நிழலிட்டது. மத்தியானவேளை சூரியவெப்பம் அவரை கொடூரமாக தாக்காதபடி அந்த ஆமணக்குசெடி நிழல்தந்து ஒரு குளிர்ச்சியான சீதோஷ்ணத்தை ஏற்படுத்தியது. யோனாவின் தற்போதைய சிந்தையை கவனத்தில் கொண்ட தேவன், அவரை அளவுக்கு அதிகமாக புரிந்து வைத்திருந்தார்.

ஆனால் யோனா அடைந்த அந்த திருப்திகரமான நிலை தற்காலிகமாக இருந்தது. "*மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார், அது ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது, அதினால் அது காய்ந்துபோயிற்று.*" அந்த பூச்சிக்கு "டாலத்" என்ற எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வகையான பூச்சி மண்ணில் வாழ்ந்து, கெட்டுபோன காய்கறிகளை உண்டு வாழக்கூடியதாக இருந்தது. திடீரென்று அந்தபூச்சி ஆமணக்குசெடியை அரித்தது. புதிதாக முளைத்த செடியின் சாறு நிறைந்த பகுதியை அந்த பூச்சி அறித்தவுடன் அந்தச்செடி காய்ந்துபோயிற்று. தீர்க்கதரிசியின் மேல் இருந்த நிழல் இல்லாமல் போனது அவருடைய தலைக்கு நேராக சூரிய கதிர் பாய்ந்தது. இந்நிலைக்குத் தள்ளப்பட்ட தீர்க்கதரிசி மிகவும் கோபமடைந்தார். "*சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார், அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி - நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்.*" அவருக்கு ஏற்பட்டிருந்த விரக்தியினாலும், அவமானத்தினாலும் மிகுதியான பாதிப்புக்குள்ளானதினால், ஒருவரும் இதுவரையிலும் தேவனை எதிர்த்து

துணிகரமாக பேசாதஅளவுக்கு, தைரியங்கொண்டு சர்வவல்லமையுள்ள தேவனை எதிர்த்துப் பேசினார். இயற்கையின் தூண்டுதலினால் அந்தச்செடி துளிர்த்து வளர்ந்தது. தீர்க்கதரிசியானவருக்கும் கொடுக்கவேண்டிய நிழலை முழுமையாக கொடுத்து. நியமிக்கப்பட்ட வேலையை முழுமையாக செய்தது. மேலும் சுற்றுப்புற சூழலுக்கு அழகை சேர்த்தது. வருங்காலத்திலும் அது பயனுள்ளதாக இருந்திருக்கும். இவ்வளவு காரியங்கள் இருக்க, இந்தசெடியை தேவன் இவ்வளவு சீக்கிரமாக அழித்தார் என்பதையும் அதனுடைய எல்லா நன்மைகளும் முடிவடைந்தது என்பதையும், அவருக்கு கிடைத்துகொண்டிருக்கும் நிழல் அகற்றப்பட்டு, உச்சி வெயிலின் உஷ்ணத்தில் விட்டுவிடப்பட்டார் என்பதையும் எண்ணி யோனா நிச்சயமாக கொபம் கொண்டிருக்கவேண்டும். அவர் மரிக்கும் அளவுக்கு கோபம் கொண்டார். இப்போது, நினிவேயின் வருங்காலத்தை குறித்தோ அல்லது தேவன் அவருக்கு நியமித்திருந்த பொறுப்பைக் குறித்தோ அவர் சிந்தியாமலும், செயல்படாமலும், அவருடைய நோக்கத்தை மட்டுமே நியாயப்படுத்தினார். இவ்வளவு காரியங்களிலிருந்து விடுப்பட அவர் மரணத்தை விரும்பினார். இனி நினிவே பட்டணத்தை குறித்து தேவன் என்ன செய்யபோகிறார் என்பதைக்குறித்து அவர் கவலைப்படவும் இல்லை, அதை பற்றி தெரிந்துகொள்ள தன்னுடைய சிந்தையை செலுத்தவுமில்லை. ஒரு மெலிதான செடி வளர்ந்து, ஏற்றுகொள்ளக்கூடிய ஒரு நல்ல உதவி செய்தது. இப்பொழுது தேவன் எந்த காரணமும் இல்லாமல் அவர் விரும்பியதால் தேவை இல்லாமல் அதை அழித்து விட்டார். ஆகவே யோனா கோபம் அடைந்ததற்கு நியாயமான காரணங்கள் இருந்தது. இந்த சூழ்நிலையில் தேவன் யோனாவிடம் திரும்ப வந்தார் - *"நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார் ? ...நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகாநகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்."*

தேவனுக்கு யோனா அளித்த பதில் நம்முடைய வேதாகமத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஒருவேளை அவர் எந்தவிதமான பதிலும் சொல்லாமல் இருந்திருக்கலாம். சொல்லியிருந்தால் அவர் என்னசொல்லியிருக்கக்கூடும் ? யோனா சேவித்த தேவன் அன்பும் இரக்கமுமானவர். மேலும் யோனா நினிவே பட்டணத்தைக் குறித்து எதையும் சொல்லவிரும்பவில்லை. உண்மையில், இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் தாங்கள் நேசிக்கும் தேவனுடைய ஊழியத்தை விரும்பி செய்வதற்காக தங்களையே ஒப்புகொடுத்தாலும், *"நான் ஜீவனை கொடுக்கவும் அது அதிகமாக*

*அவர்களுக்குள் நிலைத்திருக்கவும் நான் வந்தேன்"* என்று பாவிகளுடைய மனந்திரும்புதலைக் காட்டிலும் "*பாவத்தின் சம்பளம் மரணமே*" என்று அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையின் மேல் அதிக எதிர்பார்ப்பு வைத்திருக்கிறார்கள். இந்த நவீன கிறிஸ்தவர்களைக் காட்டிலும் யோனா வேறுபட்டவரல்ல.

ஆனால் இன்னும் சில காரியங்கள் இருந்தது. இந்த "உஷ்ணமான கீழ்க்காற்று" ஈராக்கிலும், ஈரானிலும் மிகவும் பிரபலமானது. சில குறிப்பிட்ட சூழ்நிலையில், சில வினாடிகளில் ஒரு மனிதனையே கொல்லக்கூடிய அளவுக்கு சூரியவெப்பம் சுழன்று அந்த இடத்தில் உஷ்ணத்தை அதிகரித்துவிடும். அங்குள்ளவர்கள் அதை விஷக்காற்று என்று அழைப்பார்கள். ஈரானில் 1600 குதிரை வீரர்களையும், 5000 காலாட்படைகளையும் திக்குமுக்காடச் செய்தது என்று 13-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு வெனிஷியன் பயணி மாக்ரோபோலோ என்பவர் கூறியுள்ளார்.

1928ம் வருடத்தில் ஒருமனிதன் இதே இடத்தில் இந்த விஷக்காற்றினால் மூச்சு திணறி மரித்துபோனார் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே யோனா அவருடைய சூழ்நிலையை எந்த விதத்திலும் மிகைப்படுத்தி பேசவில்லை. இந்த நிலையில் அவருடைய சரீரமும் அவருக்கு ஒத்துழைக்காததினால் அவர் உடனடியாக மரிக்கவிரும்பினார்.

மீண்டுமாக, கனிவான குரலில், எந்த விதமான கோபத்தையும் வெளிக்காட்டாமல் - - *"நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார் ?...* என்று குரல் கேட்டது. தேவனுடைய இரக்கமும், கிருபையும், மனிதனுடைய உணர்ச்சிகளுக்கும் மேலானது அல்லது அப்பாற்பட்டது என்றும் சொல்லலாம். முதலாவதாக யோனா குறைந்த காலத்திற்கு வாழ்ந்து, தேவனுடைய படைப்பில் ஏதோ சில சிருஷ்டிப்புகளுக்கு உணவாக இருக்கக்கூடிய ஒருசெடிக்காக வருத்தப்பட துவங்கினார். செடிகளின் உலகத்தில் ஒரேபொழுதில் முளைத்து, ஒரே பொழுதில் அழியக்கூடிய அந்தசெடிக்காக அவர் உண்மையிலேயே கவலைப்பட்டார். இவ்வளவு பெரிய பட்டணத்தில் வாழும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட ஜனங்கள், அவர்களுடைய குடியிருப்புகள், அவர்களுடைய மனவிருப்பங்கள், வேதனைகள், நல்லுணர்வுகள் - இவைகளை தேவன் நிராகரித்துவிடுவாரோ , உண்மையில் அவர்கள் அறியாததினால் அவர்கள் அனைவரும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள். தேவனை பற்றி அவர்கள் முழுமையாக அறியாததினால், அவருடைய பார்வையில் அவர்களுடைய வலது கரத்திற்கும் இடது கரத்திற்கும் வித்தியாசம் அறியாதவர்களாக இருந்தார்கள். ஆனால், ஒருநாள் அவர்கள் அனைவரும் தேவனுக்குமுன் நின்று அவருடைய கற்பனைகளைக் கடைபிடிக்கும் பட்சத்தில் அவருடைய சாயலையும் ரூபத்தையும் பெற்றுகொள்வார்கள். பழக்குவிக்கப்பட்டதினாலும், வாழ்க்கைபட்டதினாலும் அவர்கள் அனைவரும் கொடூரமானவர்களும்,

இரத்தபிரியருமாக இருந்தார்கள். ஆனால், உண்மையில் இவர்கள் அனைவரும் முழுமையாக கொடுமையானவர்கள் அல்ல. அவர்களின் மனந்திரும்புதல் தற்காலிகமாக இருந்தாலும், இனிவரும் காலத்தில் இவர்களை முழுமையாக சீர்ப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையை தேவன் அவர்கள்மேல் கொண்டிருந்தார்.

" *அநேக மிருகஜீவன்களும்* ". வளர்ந்த ஆமணக்குசெடியின்மேல் யோனா அதிகம் அக்கறை காட்டினார். அதே சமயத்தில் மிருகங்களின் மேல் தேவன் இரக்கம் காண்பித்தார். இதிலிருந்து நாம் ஏதாகிலும் குறிப்புகளை எடுத்து கொள்ளலாமா ? பூமிக்குரிய சிருஷ்டிப்பில் மனுஷனே அதின் மகிமையாக விளங்குவான். பூமி முழுவதற்கும் இராஜாவாக இருப்பான். இந்த நிலைக்கு மனிதனைக் கொண்டு வருவதற்காக தேவன் தன்னுடைய சாயலிலும், ரூபத்திலும் மனிதனை சிருஷ்டிப்பதற்கு அதிகமான வேதனைகளைப்பட்டார். அதேநேரத்தில், இந்த உலகத்தில் மிருகங்களுக்காக சில இடங்களை ஏற்படுத்தி அவர்களையும் தேவன் படைத்தார் என்பதை அவர் மறந்துவிடவில்லை. மரணத்தின்தூதன் அந்த பட்டணத்தை நிழலிட்டபோது, அங்கு மனந்திரும்பிய ஜனங்களை மட்டும் தேவன் பாராமல் ஊமையாக இருந்த அவருடைய சிருஷ்டிப்புகளாகிய மிருகங்களையும் தேவன் கண்நோக்கினார்.

ஆகவே நாம் யோனாவை அவருடைய குடிசையில் காத்திருப்பதற்கு விட்டுவிடுகிறோம்......... ............ எதற்கு? நாம் அறியோம். இந்த அனுபவம் அவருடைய வாழ்க்கை போக்கை முடித்துவிட்டதா அல்லது மற்ற வேலைகளை தொடர்ந்து செய்ய அனுமதித்ததா ? என்று நமக்கு தெரியவில்லை. யோனாவின் கல்லறை என்று சொல்லப்படுகிற ஒரு இடம் நினிவேயில் காணப்படுகிறது. மீண்டுமாக பழங்காலத்து காத்தேப்பேரில் உள்ளஅந்த நவீன கிராமத்தில் உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. மீண்டுமாக இஸ்ரயேலின் தெற்கு எல்லைப்பகுதியிலுள்ள கான் யூனஸ் கிராமத்திலும் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அவர் எங்கு புதைக்கப்பட்டார் என்பது இன்னும் நமக்கு தெளிவாகத் தெரியவில்லை. குர்டிஷ் மலைகளில், கசப்பான ஏமாற்றத்தோடும், வருங்காலத்தில் என்ன நடக்கும் என்ற அஞ்சுதலோடும் கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய உணர்வுள்ள இருதயம் மனம் வருந்துதலை நோக்கி சாய்ந்து, ஜனங்கள் எதிர்ப்பார்த்திராததும், சொப்பனத்திலும்கூட கண்டிராத காரியத்தை தேவன் மனுக்குலத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் மிகமகிமையானதும், மேன்மையானதுமான திட்டங்களை அவர் உணர்ந்திருக்கவேண்டும் என்று நாம் முழுமையாக நம்பலாம். இதை முழுமையாக புரிந்துகொள்வதற்கு கொஞ்சகாலம் அவர் காத்திருக்கவேண்டும். யோனாவை அடையாளப்படுத்தின ஒருவர் மனுக்குலத்திற்கு

வெளிப்பட்டு, அவருடைய முதலாம் வருகையில் துவங்கின வேலைகளை தன்னுடைய இரண்டாம் வருகையில் முடிக்கும் அந்தநாளிலே அனைத்தும் புரிந்து கொள்ளப்படும். யோனாவைப்போல, அவர் மரித்தார், மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். ஆனால் இன்னும் இந்த உலகம் மனந்திரும்பவுமில்லை, தேவனுடைய சாயலை அணிந்து கொள்ளவுமில்லை. இதற்கு இடையில் மனுக்குலத்தின் பெரும்பான்மையானோர், "*நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.. "*(அப் 4:12) என்ற நாமத்தைக்கூட செவிகளில் கேட்காமல் மரித்து கொண்டிருக்கிறார்கள். மரித்தோரும், ஜீவனுள்ளோரும் எழுந்து இதுவரையில் அவர்கள் கேட்டிராத தெய்வீக நற்செய்தியைக் கேட்டு, மனந்திரும்புவதற்கும் அப்போது இயேசு இந்த பூமியின்மேல் ஆட்சிசெய்வார் என்று இந்த உலகம் இன்னும் காத்துகொண்டிருக்கிறது. மனுஷனாக பிறந்த ஒவ்வொருக்கும் தெய்வீக வாழ்க்கையில் வாழக்கூடிய வாய்ப்பைக் கொடுக்காமல் தேவன் அவர்களை தண்டிப்பதில்லை என்ற மிகச்சிறந்த பாடத்தையே நினிவே பட்டணத்திலிருந்து நாம் கற்றுகொள்கிறோம். இயேசுவின் பகிரங்கமான ஆட்சியில், மரித்தோருக்கும், ஜீவனுள்ளோருக்கும், தேவனுடைய வழிகளை ஏற்றுகொண்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான எல்லா சாதகமான சூழ்நிலைகளும் கொடுக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய சீஷர்களாகமாறி, தேவனோடு ஒப்புரவாகுவதற்கு முழுமையான வாய்ப்புகள் கொடுக்கப்படும். ஒருவேளை கொடுக்கப்பட்ட இந்த மிகப்பெரிதான வாய்ப்பை அறிவுப்பூர்வமாகவும் மனம்துணிந்தும் புறக்கணித்தால், இனி இவர்களை நல்வழிக்கு திருப்ப முடியாது என்பதை அறிந்து, ஆழமான வேதனைகளை அடையும் தேவன் பாவிகளின் விருப்பத்திற்கு அவர்களை விட்டுவிடுவார்.

ஆகவே "... *பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டுங்காலம் வரும் அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."*

(யோவ 5:28,29) என்று இயேசு சொன்னார். மேலும் "*பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்."*(தானி 12:2) என்று தானியேலும் கூறியுள்ளார். ஆகவே நினிவே பட்டணத்தார், சீர்கேடான ஒழுங்கற்ற நடக்கை உள்ளவர்களாக இருப்பினும், தேசிய அளவிலான அவர்களின் தற்காலிகமான மனந்திரும்புதல், முகமுகமாக மற்றவர்களுக்கு

முன்பாகவும், இன்றைய ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் முன்பாகவும், நீண்ட காலத்திற்கு முன் சொல்லப்பட்ட குற்றசாட்டுக்கு மௌனமான சாட்சிகளாக நிற்பார்கள்.

அதிகாரம் பெற்ற ஒருவரால் சொல்லப்பட்டதுபோல, - "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரொடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்."

..............................................................................................................................................................